# வானவில்

# VAANAVIL

இதழ் - 78
ஆனி 2017

ISSUE – 78
JUNE 2017


# அழுகி முடைநாற்றம் எடுக்கும் பிற்போக்குத் தமிழ் தலைமையை மக்கள் தூக்கி எறிய வேண்டும்!




இலங்கைத் தமிழர்களின் அரசியல் மீண்டும் ஒருமுறை நாறிப்போயிருக்கிறது.

இந்தமுறை அது வடக்கு மாகாணசபை வடிவத்தில் வந்திருக்கிறது. ஆனால் இப்படியான நிலைமைகள் ஏற்பட்டது இதுதான் முதல் சம்பவமும் அல்ல.

இதை நாம் திரும்பத் திரும்ப எழுதுவதால் இது உடனடியாக நின்று போகப்போவதும் இல்லை.

இருப்பினும் நாம் எமது கடமையைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். முதலில் ஒன்றைக் கூறிவிட வேண்டும்.

1948இல் பிரித்தானியாவிடம் இருந்து 'சுதந்திரம்' பெற்ற பின்னர் இலங்கைத் தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் சரி, அதிலிருந்து பிரிந்து உருவான தமிழரசுக் கட்சியும் சரி, அதன் பின்னர் அந்த இரண்டு கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியும் சரி, பின்னர் அவர்களது போக்கில் அதிருப்தியுற்று ஆனால் அவர்களின் வழித்தோன்றல்களாக பின்னர் உருவாக்கப்பட்ட தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்களும் சரி, அன்றிலிருந்து இன்றுவரை ஒரே பாதையியிலேயே பயணித்து வருகின்றன. ஒரேயொரு வித்தியாசம் என்னவெனில், ஆரம்பகாலத் தலைமைகள் அகிம்சை பேசின, பின்னர் வந்த தலைமைகள் ஆயுதப் போராட்டம் செய்தன. வழிமுறையில் வித்தியாசமேயொழிய கொள்கைகளில் எவ்வித வித்தியாசமும் இருக்கவில்லை.

அன்றிலிருந்து இன்றுவரையான தமிழ் தலைமைகளின் அரசியல் நிலைப்பாட்டை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

இன மற்றும் சமூகரீதியிலான நிலைப்பாட்டைப் பொறுத்தவரையில், வட பகுதி நிலப்பிரத்துவ அடிப்படையிலான, சாதிப்பாகுபாடு கொண்ட, யாழ்.மையவாதத்தை அடிப்படையாகக் கொண்ட மேட்டுக்குழாமின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.

தேசியரீதியான நிலைப்பாட்டைப் பொறுத்தவரையில், ஏகாதிபத்திய சார்பு, தரகு முதலாளித்துவ, சிங்கள இனவாத பிற்போக்கு கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்ச்சியாக அரசியல் உறவையும், ஒருமைப்பாட்டையும் பேணி வருதல்.

சர்வதேச அரசியல் நிலைப்பாட்டைப் பொறுத்தவரை, மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளுடனும், இந்திய பிராந்திய மேலாதிக்க விஸ்தரிப்புவாத சக்திகளுடனும் கூட்டுச் சேர்ந்து அவற்றின் ஆதரவாளர்களாகவும் கையாட்களாகவும் செயற்படுதல்.

இந்த மூன்று நிலைப்பாடுகளையும் பொறுத்தவரையில், ஆரம்பகால அகிம்சை ரீதியிலான தமிழ் தலைமைகளுக்கும், பின்னர் உருவான ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்கும் அடிப்படையில் எந்த வித்தியாசமும் இல்லை. சிறு வித்தியாசம் என்னவெனில், சில ஆயுதப் போராட்ட இயக்கங்கள் இந்தியாவின் கையாட்களாகச் செயற்பட்டுக் கொண்டு, அப்போதைய இந்திராகாந்தியின் இந்தியாவுக்கு எதிரான மேற்கத்தை ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக இருந்தன. விடுதலைப் புலிகள் மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளைச் சார்ந்து நின்று கொண்டு இந்தியாவை எதிர்த்தனர்.

இத்தகைய ஒரு வரலாற்றுப் பின்னணியில், மீண்டும் தமிழ்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# ஆட்சியாளர்களைக் கிலிகொள்ள வைக்கும் சமூக ஊடகங்கள்

நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டினை உருவாக்குவதற்கு முகநூலும் சமூக ஊடகங்களும் பெருந்தடையாக உள்ளதாக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனா அண்மையில் தெரிவித்துள்ளார். தீவிரவாதக்குழுக்கள் இந்த மாதிரியான ஊடகங்களைப் பயன்படுத்தி நாட்டில் குழப்பத்தை உருவாக்க முயற்சிப்பதாகவும் எல்லோரும் இந்த நிலையை விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார். இலங்கை ஜனாதிபதி மாத்திரமல்ல, உலகிலுள்ள பல நாடுகளிலுள்ள ஆட்சியாளர்களுக்கும் இதே கருத்து உள்ளன. ஆனால் இந்த மாதிரியான ஆட்சியாளர்கள் நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டினை வளர்ப்பதற்கு சமூக வலைத்தளங்களை எப்படிப் பயன்படுத்து என்பதைப்பற்றி ஆழமாகச் சிந்திக்காமல், சமூக வலைத்தளங்களுக்கு எதிராக இப்படி போர்க்கொடி தூக்குவது ஜனநாயக விரோதச் செயற்பாடே.

இணையமென்பது தவறான கணிப்புடன் பார்க்கப் படவேண்டிய ஒன்றல்ல. இது உலகத்தை விரல் நுனிக்குக் கொண்டு வரும் ஒரு சிறப்புமிக்க தொழில்நுட்பச் சாதனை. இணையப் புரட்சியில் Social Media (சமூக ஊடகம்) எனும் Social Netwoks (சமூக வலைத்தளங்கள்) இன் பங்கு அளப்பரியது. கணனியைக் கையாளத் தெரிந்த அனைவர் மத்தியிலும், சமூக வலைத்தளம் என்பது இன்று பரந்துபட்ட, பரவலாகிவிட்ட ஒரு ஜனநாயக தகவல் சாதனம். அத்தோடு இது ஒரு புதிய ஊடக மேடை. பாரம்பரியமான வெகுஜன ஊடகம் போலல்லாமல், சமூக வலைத்தளம் ஒவ்வொரு தனிநபருக்கும் அல்லது சிறிய சிறியக் குழுக்களுக்கும் அவரவர் கருத்துகளை தணிக்கையின்றி ஒரு பெரிய மக்கள் திரளிடம் கொண்டு செல்ல வாய்ப்பளிக்கின்றது. ஆனால் அவ்வாறு செய்வதற்கு மிகப்பெரிய முதலீடு தேவையில்லை, உரிமம் பெற வேண்டியதில்லை, அதற்கான கட்டமைப்புகளையும் உருவாக்க வேண்டியதில்லை.

சமூக வலைத்தளத்தளங்களில் வெளியாகும் கருத்துக்களை வைத்தே மக்களின் கைநாடி பிடித்துப் பார்க்கப்படுகின்றது. மிகப் பெரிய ஊடகங்களே தற்பொழுது சமூக ஊடகங்களின் போக்கின் அடிப்படையிலேயே தங்களின் செய்திகளை தயாரிக்க வேண்டிய நிலையில் உள்ளன. இன்று சமூக வலைத்தளத்தளங்களில் மிகவும் பிரபல்யமானதும் பெருந்தொகையினரால் பயன்படுத்தப்படுவதும் Facebook (முகநூல்) ஆகும். 2004 ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட Facebook, 2017 ஆண்டின் முதற்கால் பகுதியில் உலகில் 1.94 பில்லியன் பாவனையாளர்களைக் கொண்டுள்ளது.

ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போலவே சமூக வலைத்தளங்கள் நன்மை, தீமையென இரு பக்கங்களைக் கொண்டன. சமூக வலைத்தளங்களின் போக்குகள் மிகப் பெரிய அளவில் வலதுசாரிக் கருத்துகளிலேயே நிரம்பியுள்ளன என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. இந்தியாவைத் தற்போது ஆட்சி செய்யும் பாரதிய ஜனநாயகக்கட்சியின் தேர்தல் வெற்றிக்கு சமூக வலைத்தளம் பெரிதும் உதவி புரிந்ததாகக் கூறப்படுகின்றது. மத அடிப்படைவாதக் கருத்துகளும் தீவிர தேசியவாதக் கருத்துகளும் சமூக வலைத்தளங்களின் ஊடாகப் பரப்பப்பட்டு வருகின்றன. அதேவேளை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, உலகமயமாதல் எதிர்ப்பு, யுத்த எதிர்ப்பு மற்றும் இடதுசாரிக் கருத்துக்கொண்ட குழுக்களும் சமூக வலைத்தளங்களை திறம்படப் பயன்படுத்தி வருகின்றன.

கால் நூற்றாண்டுக்கு மேல் நீடித்த இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில், இலங்கை அரசினதும் தமிழீழ விடுதலைப்புலிகளினதும் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதில் சமூக வலைத்தளங்கள் பெரும் பங்காற்றின என்பதை எவராலும் மறுக்க முடியாது. குறிப்பாக புலிகளின் அராஜகம் இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் கோரத்தாண்டவமாடிய பொழுது அதனை எதிர்த்துக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தது சமூக வலைத்தளங்களே. அதேபோல இலங்கை அரசும் புலிகளும் தத்தமது பிரச்சார நோக்கங்களுக்கும் சமூக வலைத்தளங்களை தாராளமாகப் பயன்படுத்தினர். 2009 ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதியுத்தம் தொடர்பான செய்திகளை சமூக வலைத்தளங்களின் வாயிலாகவே முழுமையாக அறியக்கூடியதாக இருந்தது. யுத்தம் முடிந்த பின்னரும் யுத்தத்தில் நிகழ்ந்த அவலங்களை அணையாதிருக்கும் வகையில் இன்று வரைக்கும் சொல்லிக் கொண்டிருப்பதும் சமூக ஊடகங்களே.

அண்மையில் வடக்கு மாகாணசபையில் முதலமைச்சருக்கும் தமிழரசுக்கட்சியினருக்கும் இடையில் நடந்த மோதல்களை சமூக வலைத்தளங்கள் உடனுக்குடன் வெளியிட்டன. இரு தரப்பினரும் ஊடகவியலாளர்களை சந்தித்த பொழுது, சமூக வலைத்தளங்களில் வெளியான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே ஊடகவியலாளர்கள் பல கேள்விகளைத் தொடுத்தனர். இதனால் இரு பகுதியினருமே அசௌகரியத்திற்குள்ளானதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இலங்கையின் இன்றைய நல்லாட்சியில் நம்பிக்கையிழந்துள்ள அனைத்துத்தரப்பட்ட மக்களின் போராட்டங்களையும் சமூக ஊடகங்களே பதிவு செய்து வருகின்றன. ஒன்றுபட்ட எதிர்க்கட்சியினரின் காலிமுகத்திடல் மேதின ஊர்வலத்தினை ஏராளமான சமூக வலைத்தளங்கள் நேரடி ஒளிபரப்பு செய்தன. ஒட்டு மொத்த இலங்கை மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு முற்போக்கான சமூக ஊடகங்கள் பெரிய பங்கினை வகிக்கலாம் என்பதை நம்பலாம்.

**வானவில்**


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# நினைத்துப் பார்க்கிறேன் : மீனவர் பிரச்னைக்கு தீர்வு

இலங்கை சென்ற மோடி, மீனவர்கள் பிரச்னையைப் பற்றி பேச மாட்டேன் என்று கூறியிருக்கிறார். இது ஏன் என்று கேட்டிருக்கிறார் எம்.என்.ராமசுப்பிரமணியராஜா (சென்னை-35) என்கிற வாசகர். தமிழக - இலங்கை மீனவர்கள் பிரச்னை என்பது சிக்கலான பிரச்னை. உண்மைகள் மறைக்கப்பட்டு, பொய்கள் பரப்பப்பட்டு, அரசியல் கலந்து, பிரச்னை என்ன என்று தெரியாமலேயே அது மேலும் சிக்கல் ஆகிவிட்டிருக்கிறது. 'நம் நாட்டு மீனவர்கள் மீது தவறே இல்லை, இலங்கை அரசு தான் வில்லன்' என்பதுபோல் தமிழகத்தில் நடக்கும் பேச்சும், எழுத்தும், விவாதமும் தவறு. இதுவரை இங்கு கூற வேண்டும் என்று நினைக்கிறேன். அப்போதுதான் உண்மையிலேயே வெளிப்படையாகப் பேசப்படாத, அதனால் மக்களுக்குத் தெரியாத, சில உண்மைகளை, பிரச்னை என்ன என்று புரியும். நம் மீனவர்களை இலங்கை அரசு அடிக்கடி கைது செய்து காவலில் வைத்திருந்தது உண்மை. ஆனால், மோடி அரசு வந்த பிறகு இது மிகவும் குறைந்திருக்கிறது. நம் மீனவர்கள் யாரும் இப்போது இலங்கை அரசின் காவலில் இல்லை. கடைசியாகக் கிடைத்த விபரப்படி (2017 ஏப்ரல் 4-ஆம் தேதி), ஆறு தமிழக மீனவர்கள் (மீன் பிடித்ததற்காக அல்ல - போதைபொருள் கடத்தியதற்காக) இலங்கை அரசின் காவலில் இருக்கிறார்கள். இப்போது பிரச்னையின் சரித்திரத்தைப் பார்ப்போம்.




**இலங்கை கடலில் நம் மீனவர்கள் அத்துமீறல்**

1974-76-ல் கச்சத்தீவை இலங்கைக்கு இந்திரா காந்தி விட்டுக் கொடுத்து கையெழுத்திட்ட, இந்திய - இலங்கை கடல் வழி எல்லை ஒப்பந்தங்களில், நம் மீனவர்கள் எங்கு மீன் பிடிக்கலாம், எங்கு கூடாது என்பது தெளிவாக வரையறை செய்யப்பட்டிருக்கிறது. கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியதை நம் மீனவர்கள் விரும்பவில்லை. காரணம், அதற்கு முன்பு, அவர்கள் நம் நாட்டுக் கடல்வழி எல்லையைக் கடந்து இலங்கைக்குச் சொந்தமான கடல் பகுதியில் மீன் பிடிப்பது வழக்கமாக இருந்து வந்தது. ஒப்பந்தத்துக்குப் பிறகு, அப்படிச் செய்வது கடினமானது. ஆனால், இலங்கையில் உள்நாட்டுப் போர் தீவிரமாக நடந்தபோது, இலங்கை அரசு அவர்கள் நாட்டு (தமிழ்) மீனவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதித்து, இலங்கையின் வட-கிழக்கு, வட- மேற்குப் பகுதிகளில் மீன் பிடிப்பதைத் தடை செய்திருந்தது. அதற்குக் காரணம், மீன் பிடிக்கும் போர்வையில் ஆயுதம் கடத்துதல் உட்பட பல்வேறு கடத்தல்கள் நடந்து வந்தன. அந்தச் சமயத்தில், இலங்கை மீனவர்கள் கடலுக்குள் வராததால், இலங்கைக்குச் சொந்தமான கடல் பகுதிகளில், நம் மீனவர்கள் எல்லை மீறிச் சென்று மீன் பிடிக்கும் பழக்கம் மீண்டும் துவங்கியது. இப்படி எல்லை மீறி, இலங்கைக்குச் சொந்தமான கடல் பகுதிக்குச் சென்று மீன் பிடிப்பதில் ராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். அவர்கள் விசைப் படகுகளை வைத்தும், மற்ற இயற்கைக்கு மாறான முறைகளிலும் மீன் பிடித்ததால், இலங்கை கடல் பகுதியில் மீன் வளம் பாதிக்கப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள், இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மீனவர்கள்தானே தவிர, சிங்களம் பேசும் மீனவர்கள் அல்ல. இதுதான் பிரச்னையின் துவக்கம். இலங்கைக்குச் சொந்தமான கடல் பகுதிக்கு அவர்கள் சென்றதால், இலங்கை பகுதியில் நம் மீனவர்கள் மீன் பிடிப்பது மட்டுமல்லாமல், அங்கு தவறான மீன் பிடி வலைகளை உபயோகிப்பதும் தான் பிரச்னையை வளர்த்தது. மேலும், இலங்கை கடற்படைக்கும் அடிக்கடி பிரச்னைகள் வர ஆரம்பித்தது.

இன்னும் முக்கியமான, யாரும் பேசாத, அதனால் எவரும் அறியாத விஷயம் - ராமேஸ்வரத்தில் பெருமளவு மீன் பிடிக்கும் விசைப் படகுகளும், மீனவர்களும் மூன்று நபர்களின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. அவர்களது பெயர்களை இப்போது

குறிப்பிட விரும்பவில்லை. அவர்கள் பாதுகாப்பில் மீன் பிடிப்பதோடு – இன்னும் சொல்லப் போனால், மீன் பிடிப்பதை விட – இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போதைப் பொருள்களையும், இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தங்கத்தையும் கடத்துவது முக்கியமான வியாபாரமாக இருந்து வருகிறது. மீனவர்கள் பிரச்னையைத் தீர்க்க என்ன முயற்சி செய்தாலும், கடத்தல் வியாபாரம் தடைப்படும் என்பதால், அந்த முயற்சிகள் தடைப்படுகின்றன. தவிர, இலங்கை தரப்பிலிருந்து மீன் பிடிப்பவர்கள், பெரும்பாலும் அந்த நாட்டின் வட– கிழக்குப் பகுதி தமிழ் மீனவர்கள்தான். 'இலங்கை மீனவர்கள்' என்றால் 'சிங்களர்கள்' என்று கொள்ளக் கூடாது. நம் மீனவர்களுடன் இலங்கைத் தமிழ் மீனவர்கள்தான் அதிகம் போட்டியிடுகிறார்கள். ஆக, பிரச்னை பெரும்பாலும் தமிழ் மீனவர்களுக்குள் தான்.

### தவறாக மீன் பிடிக்கும் முறைகள்

மேலும், நம் நாட்டு மீனவர்கள் கடல் மீன் வளத்தை ஒரேயடியாக அழிக்கும், செயற்கை மீன் வலைகள், 'பர்ஸ் செய்ன்' வலைகள், தவிர இரட்டை மடி வலைகள், மீன் பிடிக்கும் விசைப் படகுகள் போன்றவற்றை உபயோகித்து மீன் பிடிப்பதை, இலங்கையைச் சேர்ந்த தமிழ் மீனவர்கள்தான் முக்கியமாக எதிர்க்கிறார்கள். தவிர, இலங்கை மீனவர்கள், அவர்கள் அரசின் கட்டுப்பாடு காரணமாக, பகலில் மட்டும் மீன் பிடிப்பார்கள். 'நம் மீனவர்கள் இரவிலும் மீன் பிடிக்கிறார்கள். மீன் வளத்தை அழிக்கும் முறைகளை உபயோகிக்கிறார்கள்' என்பதுதான் நம் மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் கூறும் முக்கியப் புகார். அந்த முறையில் நம் கடல் பகுதியில் நம் மீனவர்கள் நெடுநாட்கள் மீன் பிடித்ததால், நம்முடைய கடல் பகுதியில் மீன்வளம் ஏறக்குறைய அழிந்து விட்டது. இங்கு மீன் கிடைக்காததால், நம் மீனவர்கள் எல்லையைக் கடந்து, இலங்கையின் கடல் பகுதிக்குச் சென்று மீன் பிடிக்க வேண்டியிருக்கிறது. அங்கும் நம்முடைய மீனவர்களின் தவறான மீன் பிடிமுறைகளால், இலங்கைப் பகுதி கடலிலும் மீன் வளம் பாதிக்கப்படுகிறது. இவையெல்லாம் அரசியல் காரணமாக நாம் பேச மறுக்கும் உண்மைகள்.

### பிரச்னைக்கு என்ன தீர்வு

பிரச்னையைத் தீர்க்க இதுவரை நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. நம் தரப்பிலும், இலங்கைத் தரப்பிலும் மீனவர்களும், அரசாங்க பிரதிநிதிகளும் பேசியிருக்கின்றனர். ஆனால், எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. பிரச்னையைச் சமாளிக்கச் சில வழிகள் உள்ளன. கேரளம், கர்நாடகம், வங்காளத்தில் இருப்பது போல், ராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மீனவர்களுக்கு, கூட்டுறவு முறையில் மீன் பிடிக்க, மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது, மீன் வளத்தை அழிக்கும் அப்பட்டமான மீன்பிடி முறைகளைத் தடை செய்வது, பிரச்னைக்குக் காரணமான விசைப் படகுகளை மீனவர்களிடமிருந்து நமது அரசு திரும்ப வாங்குவது, அதற்குப் பதில் வழக்கத்தில் இருக்கும் ஆழ்கடலில் மீன் பிடிக்கும் டிராலர் கப்பல்களை மீனவர்கள் வாங்க நிதி உதவி செய்வது, கிழக்கு ஆசியாவில் மீன் வளத்தைப் பெருக்கும், கேஜ் மீன் வளர்ப்பு முறையை நம் மீனவர்களுக்கு பழக்குவது – இதுபோன்ற பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் தேவைப்படும். ஆனால், இவையெல்லாம் நடக்க வேண்டும் என்றால், மீனவர்களை மையமாக வைத்து அரசியல் செய்யாமல், தெருவில் கூச்சலிடாமல், விவாதம் செய்ய வேண்டும். உண்மையை பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும், விஷயமறிந்தவர்களும் எல்லோருக்கும் எடுத்துக்கூறி உணர வைத்தால்தான், பிரச்னைக்குத் தீர்வு காணும் சூழ்நிலை உருவாகும்.

நல்ல சூழ்நிலை உருவாகாமல் தடுப்பது எது? 10 லட்சம் மீனவர்களின் வாக்குகளைக் கூறு போடும் அரசியல் கட்சிகள் மூன்றே பேரின் ஆதிக்கத்தில் மூன்று மாவட்டங்களில் மீன் பிடிக்கும் மீனவர்கள்ளும் சிக்கியிருப்பது மீன் பிடிப்பதும், கடத்தலும் கலந்திருப்பது இவற்றைத் தவிர சில அரசியல் தலைவர்கள் விசைப் படகு முதலாளிகளாக இருப்பது, இவையெல்லாம் நம்முடைய பிரச்னைகள். இவற்றை நாம் சரி செய்தால்தான், தமிழக மீனவர்கள் பிரச்னைக்குத் தீர்வு வரும். இலங்கையை மட்டுமே வில்லனாகச் சித்திரிப்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்து விடாது. மாறாக, அது பிரச்னைக்குத் தீர்வு வருவதைத் தடுக்கும்.

*-எஸ். குருமூர்த்தி*

**குறிப்பு:** இந்தக் கட்டுரை ஆசிரியர் எஸ்.குருமூர்த்தி 'துக்ளக்' பத்திரிகையின் ஆசிரியர் சோ காலமான பின்னர் தற்பொழுது துக்ளக் ஆசிரியராக இருக்கின்றார். சோவைப் போலவே இவரும் இந்துத்துவ வலதுசாரிக் கட்சியான பாரதீய ஜனதா கட்சியின் தீவிர ஆதரவாளர். ஆனால் சோவைப் போலவே இலங்கை — தமிழக மீனவர்களுடைக்கிடையிலான பிரச்சினையில் யதார்த்தபூர்மான கொள்கையைப் பின்பற்றுபவர். அதன் காரணமாகவே எமது வாசகர்களின் பார்வைக்காக இந்தக் கட்டுரையைப் பிரசுரம் செய்துள்ளோம்.

**–ஆசிரியர் குழு**

---

பழைய காலனித்துவத்தில், குறைந்தபட்சம் நமது எதிரி யார் என்பது குறித்த தெளிவு இருந்தது. முதுகுக்குப் பின்னால் பதிக்கப்பட்டிருந்த கத்தி நம்மை உறுத்திக் கொண்டே இருந்தது. நமது வாழ்வை சீராக்கி என்ன செய்யவேண்டும் என்ற அறிவு நமக்கு இருந்தது. புதிய வியாபாரமயமான உலகில் நாம் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம். ஆனால் அதைக் குறித்த உணர்வு நமக்கு முற்றிலுமாக இல்லை. அடிமைப்படுத்தப் பட்டிருப்பவனுக்கு, தன்னைப் பிணைத்திருக்கும் விலங்கு குறித்த உணர்வே இல்லையென்றால் விடியலுக்கான நம்பிக்கை ஏது? உலகமயமாக்கலின் தற்கால போக்கைப் பார்த்தால் மனிதனின் ஆசைகளும் கற்பனைகளும் உலகமயமாக்கலுக்கு அடிமையாகி உள்ளன, இது மிகப் பெரும் அபாயமாகும்.

**–ராம்சே கிளார்க்** (Ramsey clark) **அமெரிக்க முன்னாள் அட்டர்னி ஜெனரல் (அரசாங்க தலைமை வழக்குரைஞர்)**

# ஞானசாரதேரரின் கின்னஸ் சாதனை!



**இ**லங்கையின் அண்மைக்கால வரலாற்றில் பொதுபலசேனாவின் செயலாளர் ஞானசாரதேரர் நிகழ்த்திய சாதனையே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாக இடம் பிடித்திருக்கிறது.

ஞானசாரதேரர் மீது பல வழக்குகள் இருந்ததுடன், நீதிமன்ற உத்தரவை மீறியதற்காக பிடிவிறாந்தும் விடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் தேரர் எதற்கும் அஞ்சாமல் சுமார் ஒருமாத காலம் வெற்றிகரமாகத் தலைமறைவாக இருந்துள்ளார். இலங்கையின் வரலாற்றிலேயே அகிம்சையைப் போதிக்கும் ஒரு மதத்தின் குருவைப் பிடிப்பதற்கு 5 பொலிஸ் குழுக்கள் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட வெட்கக்கேடு நடந்திருக்கிறது. இருந்தும் தேரரைப் பிடிக்க முடியவில்லை.

பின்னர் தேரர் தாமாகவே முன்வந்து நீமன்றத்தில் சரணடைந்து தனது தலைமறைவு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். சட்டத்தை மீறியும் நீதிமன்றத்தை அவமதித்தும் செயற்பட்ட ஞானசார தேரருக்கு உடனடியாகவே பிணையும் வழங்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் சினிமாவில் வரும் காட்சிகள் போல 'நல்லாட்சி' நடைபெறும் ஒரு 'ஜனநாயக' நாட்டில் நடந்தேறியுள்ளன.

ஞானசாரதேரரின் விவகாரத்தில் விடைகாண வேண்டிய பல விடயங்கள் பொதிந்துள்ளன.
முதலாவது விடயம், ஞானசாரதேரரின் முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மை இனங்களுக்கெதிரான செயற்பாடுகளை ஆட்சியில் இருக்கும் இரண்டு பிரதான கட்சிகளும் சரி, எதிர்க்கட்சியினர் என்று சொல்லிக் கொள்பவர்களும் சரி, ஒருபோதும் நேரடியாக வன்மையாகக் கண்டிக்கவில்லை. இனங்களுக்கடையில் குரோதத்தைத் தூண்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொதுவாகவே சொல்லிக் கொண்டிருந்தனர்.

இரண்டாவது விடயம், தேரரைக் கைது செய்வதற்கு 5 பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு இருந்தும், பொலிசாரால் ஏன் அவரைக் கைது செய்ய முடியவில்லை. அந்தளவுக்கு இலங்கைப் பொலிசார் திறமையற்றவர்களா அல்லது பொலிசாரின் கைகளை மறைமுகமாக யாராவது கட்டிப் போட்டிருந்தார்களா?

ஞானசாரதேரரை ஜாதிக ஹெல உருமயவின் தலைவரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தான் மறைத்து வைத்திருப்பதாகவும், அதனால்தான் பொலிசாரால் அவரை அணுக முடியவில்லை எனவும், லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண பகிரங்கமாகக் குற்றம் சாட்டிய பின்னர்தான், அவரை அவசரம் அவசரமாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் காட்சி அரங்கேறியுள்ளதை தெளிவாகப் பார்க்க முடிகிறது. சம்பிக்க மீது சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ எவ்விதமான அக்கறையும் செலுத்தியதாகத் தெரியவில்லை.

தமது அமைச்சர் ஒருவர் குறித்து நாட்டின் முக்கியமான அரசியல் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஒருவர் சுமத்திய குற்றச்சாட்டுக் குறித்து அரச தலைவர்கள் பாராமுகமாகப் பொறுப்பின்றி இருப்பது 'நல்லாட்சி'யில் எந்த வகையைச் சேர்ந்தது என்று தெரியவில்லை.
இந்த விவகாரத்தில் நாட்டில் உள்ள முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவிகளைப் பெற்று சுகித்திருக்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் காத்திரமாகச் செயற்படாமல் தமது கடமையைத் தொடர்ந்தும் தட்டிக்கழித்தே வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க,

தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...

# சம்பந்தனின் நகைச்சுவை!

அண்மையில் அரசியலமைப்புப் பேரவையின் கூட்டம் நடைபெற்றபோது, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இ.சம்பந்தனுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. அப்பொழுது ஒருகட்டத்தில் நிமல் சிறிபால டி சில்வா சம்பந்தனைப் பார்த்து "தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்தின் தாளத்துக்கு ஏற்ப ஆடுகிறது" எனக் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்தார்.

இதனால் ஆத்திரமடைந்த சம்பந்தன், "உங்கள் எல்லோரையும் விட நான்தான் உண்மையான இலங்கையன். இந்த நாட்டில் ஒருசதமேனும் நான் களவாடவிலலை. ஆனால் உங்களில் யாராவது இதனைத் தைரியமாக ஏற்றுக்கொள்ள முடியுமா? அப்படியில்லையாயின் நான்தான் உண்மையான இலங்கையன்" என ஆக்குரோசத்தோடு கூறியுள்ளார். சம்பந்தனின் இந்த நாகரிகமற்ற கூற்றால் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைவரும் சங்கடத்துக்கு உள்ளானதாகத் தெரிய வருகிறது.

அதேநேரத்தில் சம்பந்தன் சொன்னபடி அவர் தூய்மையானவர்தானா என்பதை திரிகோணமலை மக்களைக் கேட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

# பாலியாற்றை பாதிப்புகளுக்கு உட்படுத்தாமல் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்!

## டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து!

**வ**டக்கு மாகாணத்தில், பாலியாற்றுக் கரையோரங்களில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை உடன் நிறுத்துவதற்கும், தற்போது அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சேதங்களை நிவர்த்தி செய்து, அதனைப் பாதுகாப்பதற்கும், மேலும் இத்தகைய செயற்பாடுகள் அப்பகுதிகளில் ஏற்படாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்சா அவர்களிடம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்தள்ள அவர், வவுனியா மாவட்டத்தின் புளியங்குளம் பகுதியருகே உருவாக்கம் பெற்று, வடக்கு மற்றும் வடமேற்கு நோக்கி வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களினூடாக மன்னார் பாக்கு நீரிணை கடல் பகுதியில் கலக்கின்ற, வரலாற்று ரீதியிலும் புகழ்பெற்ற, வடக்கின் நீர்த் தேவையினை ஓரளவு பூர்த்தி செய்கின்ற பாலியாற்றினை பாதுகாப்பதற்காக மேற்படி ஆற்றின் இரு மருங்குகளிலும் பல கிலோ மீற்றர்கள் தூரம்வரையில் அரசாங்கத்தினால் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும், இந்தக் காணிகளில் முதிரை, பாலை, கருங்காலி, மருதம் போன்ற மரங்கள் பாரியளவில் வளர்ந்து இயற்கையையும், மண்ணரிப்புகள் ஏற்படாமலும் பாதுகாத்து வருவதாகவும் தெரிய வருகின்ற நிலையில், தற்போது பலர் அப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து, காட்டு மரங்களை வெட்டியும், ஆற்றின் கரையோரப் பகுதிகளை பாரியளவில் சேதப்படுத்தியும், சட்டவிரோதமான முறையில் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு, ஆற்று நீரைப் பயன்படுத்தி வருவதாகவும், மேற்படி காணிகள் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உட்பட்டது என அடையாளப்படுத்தும் வகையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ள போதிலும், அதனையும் மீறியே மேற்படி சட்டவிரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக மேற்படி ஆறு பல்வேறு பாதிப்புகளுக்கு உட்பட்டு, அதனை நம்பியிருக்கின்ற மக்களுக்கு நீர்வளம் கிடைக்காமல் போகக்கூடிய அபாயமும், பாரிய இயற்கை அழிவுகளும் ஏற்பட்டுள்ளதாகவும் அம் மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

வடக்கில் அடிக்கடி ஏற்படுகின்ற வரட்சி கால நிலை முன்பாக இத்தகைய நீராதாரங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இன்றியமையாததாக இருக்கும் நிலையில், மேற்படி சட்டவிரோதமான செயற்பாடுகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

---

5ம் பக்கத்தொடர்ச்சி...

நாட்டின் நீதித்துறையையும், காவல்துறையையும் ஏமாற்றிய ஞானசாரதேரர் சரணடைந்த உடனேயே அவருக்கு உடனடியாக பிணை வழங்கப்பட்டுள்ளது. சாதாரண பிரசை ஒருவர் இவ்வாறு நடந்துகொண்டால் அவருக்கும் இவ்வாறான நடைமுறை பின்பற்றப்படுமா? வரலாற்றை எடுத்துப் பார்த்தால் நிச்சயமாக இல்லை.

மொத்தத்தில் ஞானசாரதேரரின் விவகாரத்தை எடுத்து நோக்கினால், கடந்த பல வருடங்களாகவே அவர் இனங்களுக்கடையில் குரோதத்தை உருவாக்குவதற்காக மேற்கொண்டு வந்த நடவடிக்கைகள் அனைத்தும் பிரதான அரசியல் கட்சிகள் எல்லாவற்றுக்கும் தெரிந்திருந்தும், அவைகள் அதுபற்றி ஏனோதானோ என்றுதான் இருந்து வந்துள்ளன. குறிப்பாகச் சொல்லப்போனால் அதிகாரத்தில் இருப்பவர்களின் துணையின்றி தேரர் இவ்வளவு துணிச்சலாகவும், தொடர்ச்சியாகவும் செயற்பட்டிருக்க முடியாது.

**-பேரின்பன்**



# வாசிப்பனுபவம்:

# "பஞ்சும் பசியும்" (நாவல்)

## எழுதியவர் - ரகுநாதன்

**இ**ந்த நாவல் 1953 இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் ரகுநாதன் அவர்களால் எழுதப்பட்டதாகும். ஸ்டார் பதிப்பகம் இந்த நாவலை வெளியிட்டிருந்ததாக ஞாபகம். 1960 களின் நடுப்பகுதியில் முற்போக்கு இலக்கியங்கள் பரிச்சயமான காலப் பகுதியில் வாசித்திருந்தேன். சமீபத்தில் அதன் ஏழாவது பதிப்பை மீண்டும் வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்த நாவலின் கருப்பொருள் 1951 ஆம் ஆண்டு வாக்கில் தமிழகத்தின் நெசவுத் தொழிலாளர்களை உலுக்கிய பஞ்ச நிலைமையாகும். அந்தக் காலகட்டத்தில் தொழில் கிடைக்காமலும், நெசவு செய்த துணிகளை விற்க முடியாமலும், வாழ வழியின்றி நெசவுத் தொழிலாளர்கள் பலர் தற்கொலை செய்து கொண்டனர். பலர் தெருத்தெருவாகப் பிச்சை எடுத்தனர். சிலர் ஒரு நேர உணவுக்காகப் பெற்ற குழந்தையை விற்றனர். பெண்கள் வயிற்றுப் பசியைப் போக்க உடலை விற்றனர். இவ்வாறாக அவர்கள் உயிர் வாழ்வதற்காக புயல்களையும், பெரும் அலைகளையும், இடிமுழக்கத்தையும் எதிர்த்து எதிர்நீச்சல் போட்டனர்.

இந்த நாவலை எழுதிய ரகுநாதன் தனது இந்த ''பஞ்சும் பசியும்'' நாவலின் படைப்பனுபவம் குறித்து 13 – 8 1961 திகதிய ''கல்கி'' இதிழில் எழுதிய ''பிறந்த கதை'' என்ற தலைப்பிலான கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்:

'பஞ்சும் பசியும்' சரித்திர நாவல், பத்தாண்டுகளுக்கு முன்னால் நமது நாட்டில் கைத்தறி நெசவாளர்கள் பட்ட அவலத்தையும் அதைப் போக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் சித்திரிக்கும் நாவல். அன்று எல்லோரையும் போலவே நானும் மவுண்ட் ரோட் ரவுண்டாணாவாயினும், மங்கம்மாள் சாலையாயினும் எங்கும் எந்தத் திக்கிலும் பஞ்சையராகித் திரிந்த நெசவாளர்களைக் கண்டேன். நாட்டு மக்களின் மானத்தைக் காப்பதற்காக உழைத்த மக்கள் தங்கள் மானத்தைக் காப்பதற்கு வகையற்றுத் திரியும் அலங்கோலத்தைக் கண்டேன். ஆணும் பெண்ணும் குழந்தை குட்டிகளும் அல்லோலகல்லோலப்பட்டுச் சீரழிவதைப் பார்த்தேன். அவற்றைக் கண்ட போது எனது உள்ளமும் உதடும் துடித்தன.

அவற்றைச் 'சொல்லு சொல்லு' என எனது மனக்குறளி இடித்தது. ஆம், அவற்றைச் சொல்லத்தான் வேண்டும்! எப்படிச் சொல்வது? அந்த மக்களோடு சேர்ந்து நானும் கண்ணீர் வடிப்பதா? நான் அழுகுணிச் சித்தன் அல்ல. கண்ணீர் விடுபவனோடு சேர்ந்து கண்ணீர் விடுவது, அவனுடன் சேர்ந்து ஒப்பாரி வைப்பது எழுத்தாளனுக்கு அழகல்ல. கண்ணீரைத் துடைக்க வழிகாணும் பாதையிலே செல்பவன்தான் சிறந்த எழுத்தாளன். மனிதத் தன்மையை இழந்து நிற்கும் அந்தப் பிறவிகளை மனிதர்களாகக் காட்ட வேண்டும் என்று நினைத்தேன். வெறும் ஜீவகாருண்ய உணர்ச்சியான மரக்கறிவாதம் அதற்குப் பயன்படாது என்பதும் எனக்குத் தெரியும். எனவே நான் அன்றைய சரித்திர சூழ்நிலையைப் புரிந்துகொள்ள முனைந்தேன். அதன் காரண காரியங்களை ஆராய்ந்தேன். அதற்காக எவ்வளவோ படித்தேன். அந்தத் துறையில் அனுபவம் மிகுந்தவர்களிடம் பேசினேன். நெசவாளர்களின் துன்ப துயரங்களையும் பிரச்சினைகளையும் அந்தச் சமூகத்தினரிடமிருந்தே கண்டும் கேட்டும் அறிந்தேன். காதில் விழுந்த செய்திகள், கண்ணில் பட்ட நிகழ்ச்சிகள் முதலியவற்றைக் கவனம் செய்து என் மன ஏட்டில் பதிவு செய்து கொண்டேன். இவ்வளவும் செய்த பின்னர் எனக்குக் கிடைத்தது என்ன? கதையின் ஆதாரசுருதியாக விளங்க வேண்டிய தத்துவ தரிசனம்தான். ஆனால் சரித்திரமோ, தத்துவமோ மட்டும் இலக்கியமாகி விடுவதில்லையே! உயிரும் உணர்ச்சியும் கொண்ட கதாபாத்திரங்கள் அல்லவா கதையை, நாவலை உருவாக்க முடியும்!...''

இவ்வாறு தனது 'பஞ்சும் பசியும்' நாவல் பிறந்த கதையை ரகுநாதன் சொல்லிச் செல்கிறார். அவரது இந்த நாவல் அது வெளிவந்த காலத்தில் பலரது கவனத்தையும் ஈர்த்ததிற்குப் பல காரணங்கள் இருந்தன.

அந்தக் காலத்து இலக்கியம் என்பது பெரும்பாலும் பழைய மன்னர்களைப் பற்றிய வரலாறாக, பெரும் பண்ணையார்கள் ஜமின்தார்களின் வரலாறாக, அல்லது காதல் கதைகளாகவே இருந்தன. அகிலன் போன்ற ஒருசிலர் இந்திய சுதந்திரப் போராட்டத்தை மையமாக வைத்து இலக்கியம் புனைந்தார்கள் என்பதிலும் ஐயம் இல்லை.

ஆனால், ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' நாவல் அவற்றைவிட வித்தியாசமானது. அவரது நாவல் நாட்டு மக்களின் ஒரு பகுதியினரான வர்க்க ரீதியாகச் சுரண்டப்பட்ட நெசவுத் தொழிலாள வர்க்கத்தை வைத்து, உண்மையில் நிகழ்ந்த வரலாற்றை அடிப்படையாக வைத்து புனையப்பட்ட சித்திரமாகும். அது ஏககாலத்தில் யதார்த்தவாத நாவலாகவும், முற்போக்கு நாலாகவும், முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புகளில் பிரச்சார வாடை வீசுகிறது என்ற குற்றச்சாட்டுக்குப் பதில் இறுப்பதாகவும் அமைந்தது.

அதனால்தான், ரகுநாதனின் இந்த 'பஞ்சும் பசியும்' நாவல் பற்றி இலங்கையைச் சேர்ந்த பிரபல மார்க்சிய இலக்கிய விமர்சகரான காலஞ்சென்ற பேராசிரியர் க.கைலாசபதி அவர்களும் மிகவும் விதந்து கூறியிருக்கிறார். அவர் தனது 'தமிழ் நாவல் இலக்கியம்' என்ற நூலில் ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' நாவல் குறித்து பின்வருமாறு கூறுகிறார்:

''சமுதாய இயக்க விதிகளையும் எதிர்காலச் சமுதாய வளர்ச்சியையும் நன்கு விளங்கிக் கொண்டு அவ்வுணர்வுடன் குறிப்பிடத்தக்க பாத்திரங்களை மெய்ம்மையுடன் சித்தரிப்பவனே யதார்த்தவாதி. இத்தகைய சிறப்புமிக்க யதார்த்த இலக்கிய நெறி தமிழ் நாவலுலகிற் பெருவழக்குப் பெற்றுள்ளதெனக் கூற முடியாது. இந்த வகையில் தென்னகத்தில் ரகுநாதனுடைய பஞ்சும் பசியும் ஒன்றுதான் விதந்து கூறத்தக்கது''.

அதன் காரணமாகவே, ரகுநாதன் எழுதிய 'பஞ்சும் பசியும்' நாவல் 64 ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் உயிரோட்டமுள்ளதாக, சுவை குன்றாததாக இருக்கின்றது.

**–கங்கை**

# சோழர் கால தேர்தல் ஜனநாயகம்!

இப்பொழுதெல்லாம் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும், தேர்தல் என்றால் சகலவிதமான முறைகேடுகளும், வன்செயல்களும் நடைபெறாமல் நடைபெறுவதில்லை. ஆனால் பலநூறு வருடங்களுக்கு முன்னர் தமிழகத்தையும், ஆசியாவின் சில பகுதிகளையும் தமது பலத்தால் கட்டி ஆண்ட சோழ மன்னர்களின் தேர்தல் முறை எப்படி இருந்திருக்கிறது என்று பாருங்கள்.

'தேர்தலில் நிற்கவேண்டுமானால், 35 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 70 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். சொந்தமாக வீடு வைத்திருக்க வேண்டும். பொதுச்சொத்தை ஆக்கிரமிப்புச் செய்திருக்கக்கூடாது. லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கக்கூடாது. எல்லா வரிகளையும் கட்டியிருக்க வேண்டும். ஒருமுறை தேர்தலுக்கு நின்றவர் அடுத்த மூன்று தேர்தல்களில் நிற்க முடியாது. அவரது குடும்பத்தாரும் நிற்கக்கூடாது. குண்டர்கள், ரவுடிகள் என்று அடையாளம் காட்டப்பட்டவர்களும் இதில் அடங்கும்.'

இந்தத் தகவல்கள் தமிழ்நாட்டில் உத்திரமேரூர் என்ற இடத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. மன்னர் ஆட்சியில் இருந்த இந்த நடைமுறை, மக்களாட்சி நடைபெறுவதாகச் சொல்லப்படும் இன்றைய காலகட்டத்தில் நமது எந்தவொரு அரசியல்வாதிக்கும் பொருந்துமா?

# பெரிது பெரிது!

வட கொரிய தலைநகர் பியோங்யாங்கில் உள்ள Rungardo May Day stadium என்ற சதுக்கமே உலகின் மிகப்பெரிய சதுக்கமாகக் கருதப்படுகிறது. இதில் 150,000 மக்கள் அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளைப் பார்வையிட முடியும்.

அதேவேளை, வட கொரிய இராணுவமும் உலகின் மிகப்பெரிய இராணுவமாக இருக்கின்றது. அதன் தொகை 7.7 மில்லியன் (77 இலட்சம்) ஆகும். அதன் எதிரி நாடான தென் கொரியாவின் இராணுவத்தின் எண்ணிக்கை 6.6 மில்லியன் (66 இலட்சம்) ஆகும்.




# முதலாவது சுரங்க வழியிலான கப்பல் பாதை!

உலகின் முதலாவது சுரங்க வழியிலான கப்பல் பாதையை அமைக்கும் பணிகளை 2019இல் ஆரம்பிப்பதற்கு நோர்வே திட்டமிட்டுள்ளது. இதன் நீளம் 5,610 அடிகளாகவும், உயரம் 162 அடிகளாகவும், அகலம் 118 அடிகளாகவும் இருக்கும்.

புயல்கள் நிறைந்த Stadhavet கடலினான பயணத்தைத் தவிர்ப்பதற்காகவே நோர்வே இந்தச் சுரங்கப் பாதையை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது.

# பக்கட் உணவுப் பிரியர்கள்!

Euromonitor International என்ற அமைப்பு அண்மையில் வெளியிட்ட ஒரு தகவலின்படி, பெரும்பாலான மேற்கத்தைய நாடுகளில் உள்ள மக்கள் 2016இல் உடன் விளைந்த உணவு வகைகளை விட பக்கட்டுகளில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்களையே கூடுதலாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். இதில் நோர்வே நாட்டு மக்களே முன்னணியில் நிற்கின்றனர். சில மேற்கு நாடுகளில் உள்ள மக்களில் சராசரியாக நபர் ஒருவர் வருடமொன்றுக்கு பக்கட் உணவுகளுக்கு செலவளித்த விபரம் வருமாறு:

நோர்வே – 2,240 டொலர்கள்

டென்மார்க் – 1,544 டொலர்கள்

யப்பான் – 1,387 டொலர்கள்.

அவுஸ்திரேலியா – 1,318 டொலர்கள்

அமெரிக்கா – 1,152 டொலர்கள்

சிலோவேனியா – 781 டொலர்கள்

# 1000 ஆண்டுகால உலகின் மிகச் சிறந்த சிந்தனையாளர்!

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் மனித இனம் கண்ட மிகப்பெரும் (சிறந்த) சிந்தனையாளர் யார்? என்ற கேள்விக்கு விடை பெறும் முகமாக பிபிசி ஒலிபரப்புச் சேவை ஒரு தொடர்ச்சியான கருத்துக் கணிப்பை 1999இல் மக்கள் மத்தியில் நடாத்தியது. இந்தக் கருத்துக் கணிப்பு நடாத்தப்பட்ட பொழுது கிழக்கு – மேற்கு ஜேர்மனிகளுக்கிடையிலான பேர்லின் சுவர் இடிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியிருந்தன.

அக்கணக்கெடுப்பின் முடிவின்படி, கார்ல் மாக்ஸ் முதலாவது இடத்திலும், அவரது கொள்கையைப் பெரிதும் விரும்பிய விஞ்ஞானி ஐன்ஸ்ரைன் இரண்டாமிடத்திலும், மற்றும் விஞ்ஞானிகளான நியுற்றன், டார்வின் ஆகியோர் முறையே மூன்றாம் நான்காம் இடத்திலும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

# நேந்திரன் வாழைப்பழம்

ஒரு நேந்திரன் வாழைப் பழத்தை ஒருவர் சாப்பிட்டாலே மூச்சு முட்டும். அந்தச் சராசரி அளவு நேந்திரன் வாழைகளைத் தூக்கி சாப்பிடும் அளவுக்கு பெரிய சைஸ் நேந்திரன் வாழைகளைத் தற்போது கேரளத்து விவசாயிகள் பயிரிட்டுக் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நேந்திரன் வாழைமரம் 15 அடி முதல் 20 அடிவரை உயரம் வளரக்கூடியது. 10 முதல் 12 சீப்புகள் வரும். அதில் ஒரு சீப்பில் 12 முதல் 18 காய்கள்வரை காய்க்கும். இப்போது திருவனந்தபுரம் வாழை ஆராய்ச்சி மையம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய வாழை ரகம், நேந்திரன் வகையைச் சேர்ந்தது என்றாலும் காய் குண்டு குண்டாக உள்ளது. ஒரு குலை 30 கிலோ முதல் 40 கிலோவரை வருகிறது. ஒரு வாழைப்பழம் எனத் தனியாக எடுத்தால் அரை கிலோ முதல் முக்கால் கிலோ எடை வருகிறது. ஐந்து அல்லது ஆறு சீப்பு மட்டுமே காய்க்கிறது. ஒரு சீப்பில் 11 முதல் 13 வாழைக்காய்கள் காய்க்கின்றன. முற்றிய இந்த வாழைக்காயைப் பயன்படுத்திச் சிப்ஸ் போட்டால் அது பப்படம் போல் பெரிய சைஸில் இருக்கிறது.

# கியூபாவில் வானத்தின் சரிபாதி பெண்கள்!

கியூபா உண்மையான ஒரு சோசலிச நாடாக இருப்பதால், அங்கு பெண்களுக்கு எல்லாத்துறைகளிலும் சமத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, அந்நாட்டின் நாடாளுமன்றமான தேசிய மக்கள் பேரவையில் 48 சதவீதமான உறுப்பினர்களாகப் பெண்களே இருக்கின்றனர். இது 'வானத்தின் சரிபாதி பெண்களே' என்ற சோசலிச கோட்பாட்டின் அடிப்படையை எடுத்துக் காட்டுகிறது.

கியூபாவில் வழங்கப்படடுள்ளது போன்ற பெண்களுக்கான அரசியல் சமத்துவம் ஜனநாயகம் பற்றி உரத்துப் பேசும் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் கூட இருக்குமோ என்னவோ?

# இதயத்தைக் காக்க...

மனிதர்கள் தினசரி 15,000 காலடிகள் நடப்பது இருதயத்துக்கு நல்லது என, ஸ்கொட்லாந்தில் 111 மத்திம வயது தபால் ஊழியர்களிடம் நடாத்திய ஆய்வுகள் மூலம் தெரிய வந்திருக்கிறது.

# உலகின் மிகப்பெரிய இரத்தினக்கல்!

ஆபிரிக்காவில் உள்ள சியாராலியோன் நாட்டில் 50,000,000 டொலர்கள் பெறுமதியான 706 கரட் (Carat) நிறையுள்ள இரத்தினக்கல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## மிகப்பெரிய டைனோசரின் காலடிகள்!

வடமேற்கு அவுஸ்திரேலியாவில் உலகின் மிகப்பெரிய டைனோசரின் காலடிகளை (Dinosaur Footprints) ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் பாதச்சுவடுகள் 115 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தியவை என கணிக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 5 அடி 9 அங்குலமாகும்.

# பூமியைப் போன்ற கிரகங்கள்

பால்வெளி மண்டலத்தில், வாழ்வதற்கு தேவையான சூழல்கள் கொண்டிருக்கக்கூடிய பத்து புதிய கிரகங்களை கண்டுபிடித்துள்ளதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பூமியை போன்ற பிற கோள்களை கண்டறிய நாசா விஞ்ஞானிகளால் நிறுவப்பட்ட கெப்லர் விண்வெளி தொலை நோக்கியின் சமீபத்திய தகவல்களை ஆராய்ந்து பார்த்ததில், தங்களின் நட்சத்திரங்களிடமிருந்து சரியான தூரத்தில் அமைந்திருக்கும் பாறைகள் கொண்ட 10 கோள்களை கண்டறிந்துள்ளதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நட்சத்திரத்திலிருந்து சரியான தூரத்தில் இருப்பதால் கோள்களில் நீர் திரவ நிலையிலேயே இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

பூமியளவு இருக்கும் அந்த கோள்கள் நமது சூரிய குடும்பத்திற்கு வெளியே, 'சிக்னஸ்' என்னும் நட்சத்திரக் கூட்டத்தில் உள்ளன.

தற்போது வரை பால்வெளி மண்டலத்தைச் சுற்றி, வாழக்கூடிய நிலைகளில் உள்ள 50 கோள்களை கெப்லர் விண்வெளி தொலைநோக்கி கண்டறிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கெப்ளரின் நான்கு ஆண்டு பணியில், 2,335 கோள்களும், 1,699 சிறிய விண் உறுப்புகளும் கண்டறியப்பட்டுள்ளன. சூரியக் குடும்பத்திற்கு வெளியே ஏறக்குறைய 3,500 கோள்களை அறிவியலாளர்கள் கண்டுள்ளனர்.

# கலைகளின் கவர்ச்சி!

2016இல் உலகம் முழுவதும் கலைப்பொருட்களின் விற்பனை 56.6 பில்லியன் டொலர்களை எட்டியுள்ளது. இதில் முக்கியமான நாடுகளின் விற்பனை வருமாறு:

அமெரிக்கா – 40 சதவீதம்,

பிரித்தானியா – 21 சதவீதம், சீனா – 20 சதவீதம், பிரான்ஸ் - 7 சதவீதம்,

ஜேர்மனி – 2 சதவீதம், இத்தாலி – 1 சதவீதம்.

# மனிதா...மனிதா...

பசுபிக் சமுத்திரத்திலுள்ள மனிதர்கள் வசிக்காத ஒரு சிறிய தீவில் மனிதனால் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் 38 மில்லியன் கழிவுப் பொரிருட்கள் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒரு சிறிய தீவில் இவ்வளவென்றால் உலகம் முழுவதும்...?

# இதை எப்படித் தூக்கிச் சென்றார்கள்?

ஜேர்மனியின் பெர்லின் நகரிலுள்ள மிகப் பாதுகாப்பான Bode அருங்காட்சியகத்திலிருந்து ஒரு குளிர்சாதனப்பெட்டியின் நிறையுள்ள 220 இறாத்தல் நிறையுள்ள மிகப்பெரிய தங்க நாணயமொன்று திருட்டுப் போயுள்ளது. திருடர்கள் இதை உருக்கி விடுவதற்கு முன்னர் கண்டு பிடிக்கும் தீவிர முயற்சியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

# மண்டேலாவின் தோழரும் காலமானார்!

தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவுடன் இணைந்து வெள்ளை நிறவெறிக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டவரான Ahmed Kathrada தமது 89ஆவது வயதில் காலமானார். இவரும் மண்டேலாவைப் போல வெள்ளை நிறவெறி ஆட்சியாளர்களினால் 26 வருடங்களுக்கு மேல் சிறை வைக்கப்பட்டிருந்தவர் ஆவார்.

# பிரித்தானியாவுக்கு வந்த சோதனை!

ஸ்கொட்லாந்து நாடாளுமன்றம் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கான இரண்டாவது சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தும்படி முறைப்படியான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. வாக்கெடுப்பில் என்ன முடிவு வந்தாலும் அம்முடிவைக் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் பிரித்தானிய அரசு உள்ளது.

# பெண்கள் தொடங்கிய பெரும் புரட்சி!

நவம்பர் 7 அதிகாலை 1.25 மணி. உலகின் முதல் சோஷலிஸ்ட் புரட்சி தொடங்கியது.

**நவம்பர் புரட்சியின் நூற்றாண்டுத் தொடக்கம் இன்று! உலகெங்கும் புரட்சி விதைகளைப் பரப்பி, ரஷ்யப் புரட்சி எந்தச் சூழலில், எப்படி நடந்தது? ஒரு நினைவுகூரல்!**

முதல் உலகப் போர் 1914-ம் ஆண்டில் தொடங்கி, நான்கு ஆண்டுக் காலம் நடந்தது. ரஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் இடையில் அப்போது நடந்த போரில், ரஷ்யா தோல்வி அடைந்து கொண்டிருந்தது. 1914, 15, 16 ஆகிய மூன்று ஆண்டுகளில் மட்டும் கொல்லப்பட்ட ரஷ்யப் படை வீரர்கள் 17 லட்சம். போர்க் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டோர் 20 லட்சம். காணாமல்போனவர்கள் 10 லட்சம்!


## கொந்தளித்த ரஷ்யா

இவர்களைப் பறிகொடுத்த லட்சக்கணக்கான தாய்களும், மனைவிகளும் வேதனையில் துடித்தார்கள் வாழ வழியின்றித் தவித்தார்கள். மறுபுறம் தொழிலாளர்கள் வேலை நேர அதிகரிப்பு, ஊதியப் பற்றாக்குறை, போர்க்காலக் கெடுபிடிகள், அடக்குமுறைகள். விலைவாசியோ உச்சத்தில் இருந்தது.

இந்தச் சூழலுக்கு இடையில், ‘‘போரை நிறுத்த வேண்டும், மன்னராட்சி ஒழிய வேண்டும்’’ என்று குரல் கொடுத்துவந்தார்கள் லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியினர்.

ரஷ்யா கொந்தளிக்கத் தொடங்கியது. மன்னராட்சியைத் தூக்கியெறிந்து, உலகின் முதல் சோஷலிஸ்ட் ஆட்சி அமைவதற்கு உண்மையில் கால்கோள் இடப்பட்ட பின்னாளில் மகளிர் நாளாக அறிவிக்கப்பட்ட - 1917, மார்ச் 8.

ஒரு ரொட்டித் துண்டுகூடக் கிடைக்காமல், தாமும் குழந்தைகளும் குடும்பத்தினரும் பசியால் துடிப்பதை இனியும் பொறுக்க முடியாது என்று பெண் தொழிலாளர்கள் கொதித்தெழுந்தார்கள், ரஷ்யத் தலைநகர் பெட்ரோகிராடில். தொழிற் சாலைகள் நிறைந்த வைபோர்க்



பகுதியில் துணி ஆலைகளில் வேலை செய்த பெண் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறினார்கள். வேலைநிறுத்தத்தில் தாங்கள் ஈடுபட்டதோடு மட்டுமல்லாமல், அருகில் இருந்த தொழிற்சாலைகளுக்குச் சென்று, அங்கு வேலையில் இருந்த ஆயிரக்கணக்கான ஆண் தொழிலாளர்களையும் போராட அழைத்தார்கள். ‘‘அனைவரும் வெளியே வாருங்கள். நமக்கு உணவு வேண்டும். போர் நிறுத்தம் வேண்டும். சுதந்திரம் வேண்டும். தெருவில் இறங்கிப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. போராட வாருங்கள்’’ என்று பெண்கள் அறைகூவல் விடுத்தார்கள்.

## இரத்த ஞாயிறு

இப்படி பெட்ரோகிராட் நகரின் முதன்மைச் சாலையான நெவ்ஸ்கி சாலையை நோக்கி ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் பேரணி பிரம்மாண்டமாகப் புறப்பட்டது. பல இடங்களில் போலீஸாரோடு மோதல் ஏற்பட்டது. பெண்களே முன் நின்று சமாளித்தார்கள். அது மட்டுமல்ல் பல இடங்களில் காவல் நின்ற ராணுவத்தினரையும் தங்கள் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அன்போடும், கண்ணீர் விட்டும் அழைத்தார்கள். படை வீரர்களும் அவர்களைப் பரிவோடு அணுகத் தொடங்கினார்கள். இதனிடையே பேரணியின் ஆவேசத்தால் ஈர்க்கப்பட்ட மாணவர்களும் அலுவலக ஊழியர்களும் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். சுமார் 1.28 இலட்சம் பேர் திரண்ட இந்தப் பேரணி, மறுநாள் தொடர் போராட்டமாக நீள வழிவகுத்தது. மறுநாள் பேரணியில் பங்கேற்றோர் எண்ணிக்கை 2 லட்சத்தைத் தாண்டியது.

முதல் நாள் உணவு, விலைவாசி, தொழிலாளர் உரிமை என்று முழங்கிய கூட்டம், இப்போது புதிய முழக்கம் ஒன்றை மேலும் சேர்ந்துகொண்டது: ‘‘மன்னராட்சி ஒழிக!’’

மார்ச் 10 இரவில் இராணுவத்துக்கு ஜார் மன்னர் உத்தரவு பிறப்பித்தார்: ‘‘போராட்டத்தை ஒடுக்கு!’’ மறுநாள் ஞாயிறு, மீண்டும் ஒரு ரத்த ஞாயிறு ஆனது. தலைவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். போராட்டக்காரர்கள் மீது மன்னரின் விசுவாசப் படையினர் நடத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் 169 பேர் கொல்லப்பட்டார்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தார்கள்.

## வீழ்ந்தது முடியாட்சி

இந்தச் சம்பவம் எரிதழலில் ஊற்றப்பட்ட எண்ணெயானது. இராணுவத்திலும் புரட்சி வெடித்தது. ஒவ்வொரு பிரிவினராக ஆயுதங்களுடன் சென்று போராட்டக்காரர்களுடன் சேர்ந்தார்கள். மறுநாள் மாலைக்குள் 66 ஆயிரம் படை வீரர்கள், தலைநகரில் இருந்த மொத்தப் படை வீரர்களில் கிட்டத்தட்ட முக்கால்வாசிப் பேர், புரட்சியில் சேர்ந்துவிட்டார்கள். போர்க்குணம் மிக்க தொழிலாளர்களுக்கு ஆயுதங்களைப் படை வீரர்கள் வழங்கினார்கள்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ‘பெட்ரோகிராட் தொழிலாளர்கள் மற்றும் படை வீரர்களின் சோவியத்’(குழு) அமைக்கப்பட்டது.

நாடாளுமன்றக் கட்டிடத்தின் ஒரு பகுதியிலிருந்து இந்த சோவியத் செயல்படத் தொடங்கியது. மறுபகுதியில் நாடாளுமன்றத்தின் முதலாளித்துவக் கட்சிகள் கூடி ‘நாடாளுமன்ற

இடைக்காலக் குழு'வை அமைத்துச் செயல்பட்டன. மறுநாள், மார்ச் 15 அன்று, 10 அமைச்சர்களைக் கொண்ட 'இடைக்கால அரசு' நாடாளுமன்ற இடைக்காலக் குழுவால் அமைக்கப்பட்டது. அன்று இரவே, ஜார் மன்னர் பதவி துறப்பதாக அறிக்கை எழுதி, மறுநாள், மார்ச் 16 அன்று அதை இடைக்கால அரசாங்கத்திடம் அளித்தார். வீழ்ந்தது முடியாட்சி!

முடியாட்சி வீழ்ந்தது. குடியாட்சி என்ன செய்தது? புரட்சியின் மூல நோக்கங்களான உணவு, போர் நிறுத்தம் மற்றும் விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையான உழுபவருக்கே நிலம் ஆகிய மூன்று மிக முக்கியக் கோரிக்கைகள் என்னவாயின?

எதுவும் நடக்கவில்லை. நாளுக்கு நாள் நிலைமை மோசமானது. மன்னர் கையிலிருந்து ஆட்சி மாறியதே தவிர, இடைக்கால அரசு அமைத்த முதலாளித்துவ சக்திகள், தமக்கே உரிய ஏமாற்று முகத்தை வெளிக்காட்டின.

நாடு கடத்தப்பட்டு வெளிநாடுகளிலிருந்து செயல்பட்டுவந்த லெனின், ஏப்ரலில் நாடு திரும்பினார். ''இந்த அரசு முதலாளித்துவ அரசு. இந்த அரசைக் கலைக்க வேண்டும். தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள் கூடி சோவியத் குடியரசை அமைக்க வேண்டும். அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே!'' என்று அறைகூவல் விடுத்தது லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி.

அடுத்தடுத்து தொடர் போராட்டங்கள். நூற்றுக் கணக்கான உயிர்த் தியாகங்கள். நாட்கள் ஓடின. கொந்தளித்துக்கொண்டிருந்தது ரஷ்யா. நவம்பர் 7 அதிகாலை 1.25 மணி. உலகின் முதல் சோஷலிஸ்ட் புரட்சி தொடங்கியது! 'செங்காவலர்'கள் என்ற பெயரில் அமைப்பாக்கப்பட்ட ஆயுதம் ஏந்திய தொழிலாளர்களும், படை வீரர்களும் பெட்ரோகிராட் நகரைச் சுற்றி வளைத்தார்கள். இடைக்கால அரசின் அமைச்சர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். அரசின் முக்கிய நிறுவனங்கள், அலுவலகங்கள் அனைத்தும் செம்படையின் கீழ் வந்தன. மறுநாள் நவம்பர் 8 அதிகாலை 3.40 மணி. ரஷ்யா முழுவதிலுமிருந்தும் வந்திருந்த சோவியத் பிரதிநிதிகளின் மாநாட்டில் லெனினுடைய தீர்மானம் முன்வைக்கப்பட்டது. ''அரசதிகாரத்தை இந்த மாநாடு ஏற்கிறது.'' சோஷலிச ரஷ்யாவின் வெற்றிப் பயணம் தொடங்கியது!

**பெண்ணுரிமைச் சாதனைகள்!**

அன்றே (1917, நவம்பர் 8 அதிகாலை) புதிய அரசின் முதல் சட்டமாக, ''போர் வேண்டாம். நியாயமான சமாதானத்துக்குத் தயார்'' என்ற சட்டத்தை மாநாடு நிறைவேற்றியது. அடுத்து, இரண்டாவது சட்டமாக நிலப் பிரபுக்கள், மத நிறுவனங்கள் போன்றோரின் நிலங்களைக் கைப்பற்றி, உழவர்களுக்கு வழங்கும் வகையில், 'அனைத்து நிலங்களும் அரசுக்கே சொந்தம்' எனும் தீர்மானம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

மூன்றாவதாக, 'தொழிலாளர்கள், விவசாயிகள் அரசாங்கமாக லெனின் தலைமையில் அமைச்சரவை அமைக்கப்படுகிறது' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த மூன்று நாட்களில், நவம்பர் 11 அன்று 8 மணி நேர வேலைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

'ஸ்ரீமான் லெனின் தலைமையில்... ரஷ்யாவில் இன்று நடைபெறுவது கம்யூனிஸம். இந்தத் தத்துவம் உலகளவில் வெற்றி பெறும்போது மக்களின் வாழ்க்கை நெறிகளும், உண்மையான நாகரிகமும் வெற்றி காண முடியும்' என்று பாரதியார் 1917 நவம்பர் 27–ல் எழுதி வரவேற்றார்.

அடுத்த ஓராண்டு காலத்துக்குள் பெண்கள் மற்றும் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக வரலாற்றுப் புகழ்பெற்ற அரசமைப்புச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்கள் ரஷ்யாவில் நிறைவேற்றப்பட்டன. 18 வயது நிரம்பிய, வெளியில் வேலை செய்து அல்லது தனது வீட்டு வேலைகளைச் செய்து உழைத்து வாழ்கிற அல்லது வேலை செய்யும் சக்தியை இழந்த ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமையும், தேர்ந்தெடுக்கப்படும் உரிமை யும் அளிக்கப்பட்டது. பிறரை வேலைக்கு அமர்த்தி லாபம் சம்பாதிப்பவர்களுக்கும், வட்டி வருமானம், சொத்திலிருந்து வருமானம் பெற்று வாழ்பவர்களுக்கும், துறவிகள், மதத் தலைவர்களுக்கும் வாக்குரிமையும், தேர்ந்தெடுக்கப்படும் உரிமையும் மறுக்கப்பட்டது.

ஆண் – பெண் வேறுபாடு இல்லாமல் சம வேலைக்குச் சம ஊதியம், வேலை பெறும் உரிமை உள்ளிட்ட ஆண் – பெண் சமத்துவம் உறுதிசெய்யப் பட்டது. கருவுற்ற பெண் தொழிலாளர்களுக்கு மகப் பேறுக்கு முன்னர் இரு மாதங்கள், பின் இரு மாதமும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை, குழந்தைப் பிறப்புக்கு முன்னும், பின்னும் தனிச் சிறப்பான பராமரிப்புகள், வேலையின்போதும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான இடைவேளை கள், பணியாற்றுமிடத்தில் ஓய்வறைகள், பண உதவி கள் உள்ளிட்ட உரிமைகள் சட்டமாக்கப்பட்டன.

**உண்மையான கம்யூனிஸம்**


திருமணம் – விவாகரத்து போன்றவற்றிலிருந்து மதம் விலக்கப்பட்டது. பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படும் திருமணம் மட்டுமே சட்டப்படியான திருமணமாக அங்கீகரிக்கப்படும் என்றானது. கருக்கலைப்பு தண்டனைக்கு உரிய குற்றம் என்ற முந்தைய சட்டம் கடாசப்பட்டு, கருக்கலைப்பு சட்டபூர்வமானது. அரசு மருத்துவ மனைகளில் பாதுகாப்பான கருக்கலைப்புக்கான வசதிகள் தொடங்கப்பட்டன. மேலும் ''யாருக்கும் காயம் ஏற்படுத்தாமலும், யாருடைய நலன்களையும் ஆக்கிரமிக்காமலும் உள்ள உடலுறவு விஷயத்தில் அரசோ, சமுதாயமோ தலையிடக் கூடாது'' என்பது அரசின் கொள்கையானது.

நவம்பர் புரட்சி சாதித்தவை ஏராளம். ஆனால், லெனின் ஆண் – பெண் சமத்துவத்துக்கான நடவடிக்கைகளையே முதன்மைப் பெருமையெனக் கருதினார். லெனின் 1919–ல் எழுதுகிறார்: ''பெண்களின் நிலைமையை எடுத்துக்கொள்வோம். நாம் அதிகாரத்துக்கு வந்த முதல் ஓர் ஆண்டுக்குள் செய்த சாதனையில் நூற்றில் ஒரு பங்கைக் கூட, உலகில் பல பத்தாண்டுகளில் எவரும் செய்யவில்லை. இந்தச் சாதனை பற்றிப் பெருமைகொள்ள நமக்கு ஆயிரம் மடங்கு உரிமை உள்ளது.'' கூடவே, அவர் ஓர் எச்சரிக்கையும் விடுத்தார். ''பெண்களைத் தாழ்வாக நடத்தும் இழிவான சட்டங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றை நொறுக்கித் தள்ளிவிட்டோம். ஆனால், கட்டிடம் கட்டுவதற்காக மனையைச் சுத்தப்படுத்தியிருக்கிறோமே தவிர, இன்னும் கட்டிடத்தைக் கட்டிவிடவில்லை என்பதும் நமக்குத் தெளிவாகவே தெரிகிறது!'' மேலும் அவர் சொன்னார்: ''உண்மையான பெண் விடுதலையிலிருந்தே உண்மையான கம்யூனிஸம் தொடங்குகிறது!''

**–இரா.ஜவஹர்**

நன்றி: தி இந்து

# மாயமான்கள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்!




இலங்கையின் இன்றைய அரசியல் சூழல் சற்றுக் குழப்பமாகவே இருந்து வருகிறது. இந்தக் குழப்பம் இலங்கைக்கு மட்டும் பிரத்தியேகமான ஒன்று அல்ல. உலக ரீதியில் ஏற்பட்டுள்ள குழப்பமான சூழலின் விளைவே இலங்கையிலும் எதிரொலிக்கிறது எனலாம். இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவின் பின்னர் அமெரிக்கா, சோவியத் யூனியன் என்ற இரண்டு மேல்நிலை வல்லரசுகள் உலக அரங்கில் வளர்ச்சி பெற்றன. ஆனால் 90களின் ஆரம்பத்தில் சோவியத் யூனியனில் இருந்த சோசலிச அரசு தகர்ந்து போனதுடன், அதன் பல குடியரசுகளும் பிரிந்து சென்றன. இந்தச் சூழலைப் பயன்படுத்தி அமெரிக்கா ஒரேயொரு மேல்நிலை வல்லரசாக வளர்ச்சி பெற முயன்றது.

ஆனால் சீனாவின் அபரிமிதமான பொருளாதார, அரசியல், இராணுவ வளர்ச்சி அமெரிக்காவின் கனவைத் தவிடுபொடியாக்கியது. அத்துடன் முதலாளித்துவப் பாதையில் அடியெடுத்து வைத்த ரஸ்யாவும் (முன்னாள் சோவியத் யூனியன்) தன்னை மீண்டும் பலப்படுத்தத் தொடங்கியது. இந்த நிலைமைகளால் உலக அரங்கில் புதிய அணிசேர்க்கைகள் ஆரம்பமாகத் தொடங்கின. அதன் தாக்கம் இலங்கை உட்பட பல நாடுகளையும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில், சில பிரத்தியேக சூழ்நிலைகளும் இந்த மாற்றங்களுக்குத் துணை புரிந்துள்ளதை அவதானிக்கலாம்.

## தோழர் மணியம்

1948 பெப்ருவரி 4ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே சோசலிச இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட இடதுசாரிக் கட்சிகள் செயற்படத் தொடங்கிவிட்டன. ஆனால் இலங்கையின் முதலாளித்துவம் தரகு முதலாளித்துவ வர்க்கமாக இருந்ததுடன், பிரித்தானிய காலனித்துவவாதிகளையே சார்ந்தும் இருந்தது. சுதந்திரத்துக்கு சற்று முன்னர்தான் அது தனது சொந்தக் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியை ஸ்தாபித்தது. அந்தக் கட்சி பிரித்தானிய ஏகாதிபத்திய சார்பானதாகவும், உள்நாட்டில் நிலப்பிரபுத்துவ — பெருமுதலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும் இருந்தது.

இலங்கை முதலாளித்துவத்தின் இந்தப் போக்கு நீண்டகாலம் நீடிக்கவில்லை. இலங்கையின் தேசிய முதலாளித்துவம் ஐ.தே.கவின் விதேசிய சார்பான போக்கை விரும்பவில்லை. எனவே இலங்கை முதலாளி வர்க்கத்தில் ஒரு பிளவு ஏற்பட்டு, தேசிய முதலாளி வர்க்கம் தன்னுடன் இணையக்கூடிய தொழிலாள — விவசாய — மத்தியதர வர்க்கங்களைச் சேர்த்துக்கொண்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையில் தனது சொந்தக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தது.

இதன் பின்னர், இலங்கையின் அரசியல் காட்சி நிலைமைகள் தெளிவடையத் தொடங்கின. அதாவது, ஏகாதிபத்தியமும் அதற்கு துணைபோகும் தரகு முதலாளித்துவக் கட்சியான ஐ.தே.கவும் இலங்கை மக்களின் பிரதான எதிரியாக வரையறுக்கப்பட்டன. ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்த சிறீ.ல.சு.கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும்) ஏகாதிபத்திய விரோத, மக்கள் சார்புக் கட்சிகளாகவும், தமக்கிடையே நேசசக்திகளாகவும் இனம்காணப்பட்டன. இந்த நிலைமையில் இன்றளவும் அடிப்படையான மாற்றம் எதுவுமில்லை.

மறுபக்கத்தில், தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில், ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ஐ.தே.கவின் ஒரு கிளை போலவும், யாழ்.நிலப்பிரபுத்துவ மேட்டுக்குழாமின் பிரதிநிதியாகவும், இனவாதக் கட்சியாகவும் செயற்பட்டதால், அக்கட்சியும் ஏகாதிபத்திய சார்பு, பிற்போக்குக் கட்சியாகவே இனம் காணப்பட்டது. அதிலிருந்து பிரிந்து பின்னர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் உருவான தமிழரசுக் கட்சியும் அதே பாதையில் பயணித்ததால், அக்கட்சியும் அவ்வாறே கருதப்பட்டது.

பின்னர் தமிழரசு — காங்கிரஸ் கட்சிகள் இணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி, அதன் தொடர்ச்சியாக உருவான விடுதலைப் புலிகள் என்பனவும், அவர்களால் உருவாக்கப்பட்ட இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பனவும் கூட அதே ஏகாதிபத்திய சார்பு, ஐ.தே.க. சார்பு நிலைப்பாட்டை எடுத்ததினால், அவையும் மக்கள் விரோதப் பிற்போக்குக் கட்சிகளாகவே இனம் காணப்பட்டன. அந்த நிலைப்பாட்டிலும் இன்றுவரை எந்த மாற்றமும் நிகழவில்லை.

இலங்கையின் அரசியல் நிலைமைகளைப் பொறுத்தவரையில், இந்த அடிப்படை நிலைமைகளில் இன்றுவரை எவ்வித மாற்றங்களும் ஏற்படாதபோதும், ஏகாதிபத்திய சக்திகளின் உதவியுடன் செயற்பட ஆரம்பித்த சில அரசியல் சக்திகளும், அரசசார்பற்ற நிறுவனங்களும், இலங்கையின் அரசியல் நிலவரங்களைக் கணிக்கும் அளவுகோல்களை மாற்றியமைப்பதற்கு முயன்று வருகின்றன. அதிலும் குறிப்பாக அவை மக்களை ஏமாற்றுவதற்காக தமது வாதங்களுக்கு இடதுசாரிக் கருத்துக்களை துணைக்கு இழுக்க முயற்சிக்கின்றன.

இலங்கையின் அரசியல் நிலவரம் குறித்த மார்க்சிய ரீதியிலான நிலைப்பாட்டைத் தடம் புரட்டும் முயற்சி முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது ஜே.வி.பியின் காலத்திலாகும். பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளின் தவறுகளை உரமாகக் கொண்டு வளர்ந்த ஜே.வி.பி., தன்னை ஒரு பதிய புரட்சிகரமான இயக்கமாக காட்டிக்கொண்டு இளைஞர்களிடையே வேகமாகச் செல்வாக்குப் பெற்றது.

ஆனால் அதன் நடவடிக்கைகள் யாவும் எதிர்ப்புரட்சிகரமானவையாகவும், ஐ.தே.கவிற்கு உதவுபவையாகவும், அழிவுகரமானவையாகவும் இருந்தன. அதற்குக் காரணம், உண்மையான இடதுசாரிக் கட்சிகளையும், அவற்றின் இயல்பான நேச அணியாகவும் இருந்த சிறீ.ல.சு.கட்சியையும் அழிக்க விரும்பிய ஐ.தே.கவும், ஏகாதிபத்திய சக்திகளும் ஜே.வி.பியுடன் இரகசிய உறவு வைத்து, அதை வழிநடாத்திச் சென்றமையினாலாகும். அதன் காரணமாகவே இலங்கையின் வரலாற்றில் என்றமில்லாதவாறு, தன்னை ஒரு இடதுசாரிக் கட்சி என்று சொல்லிக்கொண்டு ஜே.வி.பி. பிற்போக்கு ஐ.தே.கவுடன் இணைந்து வேலைசெய்து வந்துள்ளது.

இந்த மாதிரியான நிலவரம் தமிழ் பகுதியிலும் ஏற்பட்டது. பாரம்பரியமான தமிழ் தலைமைகளின் கையாலாகாத்தனத்தை வைத்துக்கொண்டு உருவான தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்ட இயக்கங்களையும், குறிப்பாக புலிகள் அமைப்பை ஏகாதிபத்திய சக்திகள் வழிநடாத்தும் சூழல் ஏற்பட்டது. இதற்கு ஒரு உதாரணம், புலிகள் அமைப்பு இஸ்ரேலிய சியோனிச அரசின் உளவு அமைப்பான மொசாட்டிடம் ஆயுதப் பயிற்சி பெற்றமையாகும்.

உண்மையான பாசிச அமைப்பான புலிகளை இந்த ஏகாதிபத்திய சக்திகள் ஒரு விடுதலை அமைப்பாக மாற்றிக்காட்ட முயன்றன. இதன் காரணமாக பல தமிழ் இடதுசாரிகள் கூட நிலைதவறி அதனுடன் இணைந்தனர். அதன் தாக்கம் எவ்வளவு தூரம் இருந்தது எனில், இலங்கையில் தன்னை ஒரு தூய்மையான மார்க்கிய — லெனினியவாதி எனக்கூறிச் செயற்பட்டு வந்த நா.சண்முகதாசன் போன்றவர்களே பாசிசப் புலிகளை விடுதலைவாதிகளாகச் சித்தரித்து அறிக்கைகள் விடுத்தனர். இந்தியாவிலுள்ள 'நக்சலைற்' குழுக்கள் சிலவும் புலிகளை ஏதோ மார்க்சிய இயக்கத்தைச் சேரந்தவர்கள் போலவே கருதிக் கொண்டிருக்கின்றனர். சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றில் முன்னொருபோதும் இப்படியான பிறழ்வுகள், தடுமாற்றங்கள் இருந்தது கிடையாது.

இது ஒருபுறமிருக்க, 2015 ஜனவரி 08இல் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று மேற்கத்தைய சக்திகளால் ஏற்படுத்தப்பட்டு, வலதுசாரி அரசாங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்ட பின்னர், நாட்டின் அரசியல் நிலைமை மேலும் மோசமானதொரு கட்டத்தை அடைந்துள்ளது. இந்த ஆட்சி மாற்றத்திலும் பிற்போக்கு தமிழ் தேசியவாதிகளும் (புலம்பெயர் புலித் தமிழர்கள் உட்பட), தென்னிலங்கையின் போலி இடதுசாரிகளான ஜே.வி.பியினரும் முக்கியமான பங்கு வகித்தனர். இவர்களது பங்களிப்பு எதிர்பார்த்ததே.

ஆனால், தம்மை உண்மையான இடதுசாரிகள் என்று சொல்லிக் கொண்டவர்களும், மனித உரிமை பேசியவர்களும், ஊடக சுதந்திரம் பேசியவர்களும், புலிகளை எதிர்ப்பதாகக் கூறியவர்களும், இன்றைய ஐ.தே.க. தலைமையிலான வலதுசாரிப் பிற்போக்கு அரசைப் பதவிக்குக் கொண்டு வருவதற்கு உதவி புரிந்தமைதான் எவ்விதத்திலும், எந்தக் காலத்திலும் நியாயப்படுத்த முடியாதது. இவர்கள் விட்ட தவறை இவர்கள் உணர்வதற்கு முன்பே எதிர்ப்புரட்சிச் சதிகாரர்கள் நாட்டுக்குள் ஆழமாக ஊடுருவிவிட்டார்கள்.

நீண்டகாலமாக மேற்கத்தைய நாடுகளில் வாசம் செய்து இலங்கைக்கு எதிரான சக்திகளுடன் இணைந்து வேலைசெய்து வந்த இந்தச் சதிகாரர்கள் போர் முடிவுற்றதும் நாடு திரும்பி இப்பொழுது ஒரு குழுவாக (குறிப்பாக வட மாகாணத்தில்) வேலை செய்கின்றனர். இவர்களது வேலைகளை அவதானித்துப் பார்த்தாலே இவர்களது நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

இவர்கள் தமிழ் தேசியவாதத்தைப் பின்பற்றும் சாதாரண மக்களை சரியான பாதைக்குக் கொண்டு வருவதற்கான வேலையை ஒருபோதும் செய்வதில்லை. மாறாக, இவர்களது ஊடுருவல் எல்லாம் இடதுசாரி சக்திகள், அவர்களைப் பாரம்பரியமாக ஆதரித்து வரும் தொழிலாளர்கள், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலேயே நடைபெறுகின்றன. அதற்கான காரணம், இந்த மக்கள் இடதுசாரிகளின் செயற்பாடுகள் வட பகுதியில் பலவீனப்பட்டுப் போனபின்னர், பாசிசப் புலிகளுக்கும், அவர்கள் உருவாக்கிய பிற்போக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் எதிராக உறுதியாகப் போராடி வரும் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி கட்சிக்கு ஆதரவாக

இருப்பதால், அந்த நிலைமையை உடைப்பதே இவர்களது பிரதான நோக்கம்.

இந்தச் சதிகாரர்கள் முற்போக்கு, மனித உரிமை, ஜனநாயகம் எல்லாம் பேசி மக்களைக் கவர முயற்சிக்கிறார்கள். அதனால் மக்களில் ஒரு பகுதியினர் இவர்களிடம் ஏமாந்தும் போகின்றனர். இவர்களை இனம் காண்பதானால் இவர்களது அரசியல் நிலைப்பாட்டை அவதானித்தால் முடியும்.

முற்போக்குப் பேசும் இவர்கள், ஏகாதிபத்தியத்தையோ, பிற்போக்கு ஐ.தே.கவையோ, அவற்றுடன் கூடிக்குலாவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற பிற்போக்குத் தலைமையையோ ஒருபோதும் எதிர்த்துப் பிரச்சாரம் செய்யமாட்டார்கள். பதிலுக்கு எப்போதும் மகிந்த ராஜபக்சவையும், டக்ளஸ் தேவானந்தாவையும் எடுத்ததிற்கெல்லாம் வசைபாடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பர். அதிலிருந்தே அவர்களை இனம்காண முடிவதுடன், அவர்களை அவர்களது எஜமானர்கள் என்ன நோக்கத்துக்காக இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

எனவே, முற்போக்கு சக்திகள் இந்தவிதமான சக்திகள் குறித்து மிகவும் விழிப்பாக இருப்பதுடன், மக்களையும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் சகல இன மக்களினதும் பிரதான விரோதிகள் ஏகாதிபத்தியவாதிகளும், அவர்களை ஆதரிக்கும் ஐ.தே.க., மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீ.ல.சு.கட்சியின் வலதுசாரிப் பிரிவு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பனவே என்பதில் நாம் எப்பொழுதும் தெளிவாக இருக்க வேண்டும். மார்க்சிய – லெலினிய அடிப்படையிலானதும், இலங்கையின் மிக உன்னதமான எமது இடதுசாரி முன்னோடித் தலைவர்களாலும் வகுத்த இந்த நிலைப்பாட்டிலிருந்து இம்மியளவு விலகினாலும், நாம் வலதுசாரிகளின் பக்கம்தான் போய்ச் சேருவோம் என்பதனை எப்பொழுதும் நினைவில் இருத்திச் செயற்பட வேண்டும்.

---

**முன்பக்கத் தொடர்ச்சி...**

அரசியல் சக்திகள் மத்தியில் எதிரும் புதிருமான இரு அணிகள் என்ற ஒரு தோற்றப்பாடு உருவாகியுள்ளது. ஆனால் அரசியல் ரீதியாக இரண்டு அணிகள் உருவாகியுள்ளனவா என்பது கேள்விக்குரியது.

இன்று சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோரால் தலைமை தாங்கப்படும் தமிழரசுக் கட்சிக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனால் தலைமைதாங்கப்படும் தீவிர தமிழ் தேசியவாதிகள் போல் தோற்றமளிக்கும் அணியினருக்கும் இடையிலான முரண்பாட்டை வைத்துக்கொண்டு, தமிழ் அரசியல் அரங்கில் எதிரும் புதிருமான இரண்டு அணிகள் உருவாகியுள்ளதாகச் சிலர் தப்புக்கணக்குப் போடுகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல.

தமிழரின் அரசியல் வரலாற்றில் இதற்கு முன்னரும் எதிரும் புதிருமான அரசியல் அணிகள் இருந்திருக்கின்றன. தமிழர்களின் மூத்த அரசியல் கட்சியான தமிழ் காங்கிரசிற்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் சுமார் 27 வருட காலம் போட்டி அரசியல் நிலவியது. தமிழ் மக்களின் நலன்களுக்காக இரண்டு கட்சிகளையும் ஒன்றுபட்டுச் செயற்படுமாறு மக்கள் தரப்பிலிருந்து விடுக்கப்பட்ட கோரிக்கைகளை இரு தரப்பினருமே ஏற்றுக்கொள்ளாமல் கீரியும் பாம்புமாகச் செயற்பட்டு வந்தனர். ஆனால் 1970 பொதுத்தேர்தலில் இரண்டு கட்சிகளினதும் முக்கிய தலைவர்கள் மக்களால் தோற்கடிக்கப்பட்டபோது, தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், மக்களை ஏமாற்றவும், இரண்டு கட்சியினரும் இணைந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (தமிழர் விடுதலைக் கூட்டணி) என்ற புதிய அமைப்பை உருவாக்கியதுடன், தாங்கள் அதுவரை காலமும் பின்பற்றிய வங்குரோத்துத்தனமான அரசியல் கொள்கைகளை மறைக்க "தமிழீழம்" என்ற இன்னொரு வங்குரோத்துத்தனமான கொள்கையையும் முன்வைத்தனர்.

அதுபோன்றதொரு நிலைமைதான் இப்பொழுது சம்பந்தன் குழுவினருக்கும், விக்னேஸ்வரன் குழுவினருக்கும் இடையில் உருவாகியுள்ளது. விக்னேஸ்வரன் இப்பொழுது பேசுகின்ற அதிதீவிரத் தமிழ் தேசியவாதம், முன்னைய மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சம்பந்தன் குழுவினரால் தீவிரமாகப் பேசப்பட்ட ஒன்றுதான். மகிந்த ராஜபக்சவின் ஆட்சி அவர்களுக்குப் பிடிக்காததால், அவர்கள் அப்பொழுது அப்படிப் பேசினார்கள். பின்னர் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஐ.தே.க. தலைமையிலான வலதுசாரி அரசாங்கம் அமைந்த பின்னர், தாம் அதுவரை பேசிய தமிழ்த் தேசியவாதக் கொள்கைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு அந்த அரசுடன் கொஞ்சிக்குலாவ ஆரம்பித்திருக்கிறார்கள். இது வழமையாக எல்லாத் தமிழ் தலைமைகளும் காலத்துக்குக் காலம் செய்துவரும் ஒன்றுதான்.

இதில் விக்னேஸ்வரன் குழுவினர் ஏன் எதிர் நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்ற ஒரு நியாயமான கேள்வி எழலாம். அதற்கு மூன்று காரணங்களைக் கூறலாம்.

ஒன்று, இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் இருக்கின்ற புலி ஆதரவாளர்கள் உட்பட தீவிர தமிழ் தேசியவாதிகளின் பிரதிநிதியாகத் தன்னை நிலைநிறுத்தி, தமிழ் மக்களின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றும் விக்னேஸ்வரனின் அபிலாசை.

இரண்டாவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சி தவிர்ந்த மூன்று பங்காளிக் கட்சிகளும் தமிழரசுக் கட்சித் தலைமையின் எதேச்சாதிகாரப் போக்கை ஏற்காது இருப்பதுடன், அக்கட்சிக்கு எதிராக வெளியில் இருக்கின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, வீ.ஆனந்தசங்கரியின் தமிழர்

விடுதலைக் கூட்டணி என்பனவும் தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளதால், அவற்றின் துணையுடன் தமிழரசுக் கட்சியின் தலைமையை எதிர்த்து வெற்றிபெற முடியும் என விக்னேஸ்வரனுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கை.

மூன்றாவதாக, தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை மீதும், அது ஆதரிக்கின்ற இன்றைய 'நல்லாட்சி' அரசு மீதும் நம்பிக்கை இழந்துள்ளதால், மக்களின் ஆதரவை தமது பக்கம் வென்றெடுக்கலாம் என விக்னேஸ்வரன் அணிக்கு ஏற்பட்டிருக்கும் அதீத நம்பிக்கை.

இவைதான் உண்மையில் சம்பந்தன் அணிக்கும், விக்னேஸ்வரன் அணிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகலின் அடிப்படைகள். உள்ளுக்குள் பாரிய நோய் இருப்பவனுக்கு அதன் வெளிப்பாடாக காய்ச்சல் அடிப்பது போல, இந்த அடிப்படை நோய்களின் வெளிப்பாடாக வட மாகாணசபையின் சில அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் வெளிக் காய்ச்சலாக வெளிப்பாடடைந்துள்ளன.

அந்த ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு தற்காலிக நிவாரணம் தேடி, இரு தரப்பும் சில சமரசங்களுக்கு வந்தாலும், அடிப்படையான வியாதி தீரப்போவதில்லை. அமுக்கி வைக்கப்பட்டிருக்கும் அந்த வியாதி மேலும் பூதாகரமாக வெடித்துக் கிளம்புவது திண்ணம்.

இங்கே பிரச்சினை என்னவெனில், அதிகாரத்துக்காக மல்லுக்கட்டி நிற்கும் இரண்டு அணிகளுக்கடையிலும் அடிப்படையான அரசியல் வித்தியாசம் எதுவும் கிடையாது என்பதுதான். அடிப்படையான வித்தியாசம் இருக்குமானால் மக்கள் சரியான பாதையில் நிற்கும் அணியை ஆதரிக்கலாம். ஆனால் நிலைமை அப்படி இல்லை. ஒரு அணி மிதமான தமிழ் தேசியவாதத்தைப் பின்பற்ற, மற்றைய அணி தீவிரமான தமிழ் தேசியவாதத்தைப் பின்பற்றுகிறது என்பதுதான் வித்தியாசம். சாராம்சத்தில் இரண்டுமே பிற்போக்குத் தமிழ் தேசியவாதத்தைத்தான் தமது அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதில் மாற்றம் வந்து தமிழ் தேசியவாதம் என்பது முற்போக்கான திசைவழியில் ஒரு 'தேசிய ஜனநாயகப் போராட்டமாக' மாறும் பொழுதுதான் அடிப்படையான மாற்றம் நிகழும்.

இப்பொழுது இரண்டு அணிகளாகக் கச்சை கட்டி நிற்கும் ஏதாவது ஒரு அணியின் பின்னால் மக்கள் அணி திரள்வது, அவர்கள் மீண்டுமொருமுறை தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்வதில்தான் போய் முடியும். மக்களுக்கு முன்னால் உள்ள தெரிவு தற்பொழுது இருக்கும் கொதிக்கும் எண்ணெய் சட்டிக்குள் இருந்து வெளியேறி எரியும் நெருப்புத் தணலுக்குள் விழுவதல்ல.

இன்றைய தேவை, தற்போது இருக்கின்ற பிற்போக்கான, காலாவதியாகிப்போன தமிழ் தலைமைக்குப் பதிலாக, புதிய முற்போக்கான திசைவழியில் சிந்திக்கின்ற, மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்ற ஒரு தலைமையை தமிழ் மக்களுக்காக உருவாக்குவதுதான். இதைச் சாத்தியமாக்குவதற்கு முற்போக்குச் சிந்தனையும், ஜனநாயக உணர்வும், மக்கள் நலனில் அக்கறையும் கொண்ட தமிழ் அறிவுஜீவிகள் முன்வர வேண்டும்.

# வடகொரியா மக்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறார்கள் தெரியுமா? உண்மையை வெளிக்காட்டும் வீடியோ

உலகின் மிகவும் மர்மமான நாடு என கூறப்படும் வடகொரியாவில், இணையத்தில் மிகவும் அறியப்பட்ட பயண பிளாகர் (travel blogger) ஒருவர் மூன்று நாட்கள் தங்கி அந்நாட்டு மக்களின் வாழ்க்கையை பதிவு செய்து வீடியோவாக வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த Drew Binsky என்னும் பயண பிளாகர் (travel blogger) தனது சிறப்பம்சத்தால் இயைணத்தில் ஆயிரக்கணக்கான பின்பற்றுபவர்களை கொண்டுள்ளார்.

இந்நிலையில், Drew Binsky தனது சமீபத்திய வேலையாக வடகொரியா தலைநகர் பியோங்கியாங்கில் (Pyongyang) மூன்று நாட்கள் தங்கியிருந்து அந்நாட்டு மக்களின் வாழ்க்கையை வீடியோவாக படமெடுத்து பதிவிட்டுள்ளார். வீடியோ இணைப்பு: https://www.youtube.com/watch?v=tRnV2P5T5VA

குறித்த வீடியோவின் மூலம் வட கொரியா மக்கள் மகிழ்ச்சியோடும், அன்போடும் நிம்மதியாக அமைதியாக வாழ்வதை அனைவராலும் பார்த்து உணர முடிகின்றது.

இதுகுறித்து Drew Binsky Goldberg கூறியதாவது, இந்த வீடியோ வட கொரியாவில் எனது தனிப்பட்ட அனுபவங்களைப் பற்றியது.

இந்த வீடியோவை கண்ட பலர், வட கொரியா அரசின் கட்டாயத்தால் இதுபோன்ற வீடியோவை நான் வெளியிட்டுள்ளதாக எதிர்மறை கருத்துகளை கூறி வருகின்றனர்.

அது முற்றிலும் பொய்யானது. இந்த வீடியோ 100% நேர்மையாக மற்றும் என் தனிப்பட்ட அனுபவத்திலிருந்தே செய்தேன் என தெரிவித்துள்ளார்.

# மாணவர்கள் மீதான அடக்குமுறை விபரீதமான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்!

**'சைட்டம்'** எனப்படும் தனியார் மருத்துவக் கல்லூரியை மூடிவிடும்படி கோரி மருத்துவ மாணவர்கள் ஆரம்பித்த போராட்டம் பல மாதங்களாகத் தொடர்கிறது. இலவசக் கல்விக்கு ஆப்பு வைக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரிக்கு எதிராக இன்று மருத்துவ மாணவர்கள் மட்டுமின்றி, அனைத்துத்துறை மாணவர்களும் வைத்தியர்களும் கூட போராட்டத்தில் குதித்துள்ளனர்.

அந்தத் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டம் நாளுக்குநாள் தீவிரம் அடைந்து வந்துள்ள போதிலும், அரசாங்கம் அது சம்பந்தமாக உருப்படியான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாது அசட்டையாக இருந்து வருகிறது. குறிப்பாக, சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன இந்த மருத்துவக் கல்லூரியை வெளிப்படையாக ஆதரிப்பதுடன், அதற்கெதிராகப் போராட்டம் நடாத்துபவர்களை ஒரு சர்வாதிகாரி போல அடக்கியொடுக்கவும் முற்படுகின்றார்.

இதன் உச்சக்கட்டமாக, அண்மையில் இந்த விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு சுகாதார அமைச்சுக்குச் சென்ற மருத்துவபீட மாணவர்கள் மீது பொலிசாரினதும், விசேட அதிரடிப்படை வீரர்களினதும் துணைகொண்டு அரசாங்கம் மிகவும் மோசமான முறையில் தாக்குதல் நடாத்தியுள்ளது. அத்துடன் போராட்டத்துக்குத் தலைமைதாங்கிய மாணவர் தலைவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைத்தும் உள்ளது.

இதன் விளைவாக மாணவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்தும், வேறு சில கோரிக்கைளை வலியுறுத்தியும் வைத்தியர்கள் நாடு தழுவிய வேலைநிறுதத்தில் குதித்துள்ளனர். அதன் காரணமாக அப்பாவி நோயாளர்கள் தமது நோய்களுக்குச் சிகிச்சை பெறமுடியாது நிர்க்கதியாகியுள்ளனர். இந்த நிலைமையை வைத்தியர்களுக்கு எதிராகப் பொதுமக்களைத் திருப்பிவிடும் தந்திரமாக அரசாங்கம் பயன்படுத்த முனைகிறது.

மாணவர்கள் மீது பொலிசாரும், விசேட அதிரடிப்படையினரும் நடாத்திய தாக்குதல் இதுவரை கால வரலாற்றில் இல்லாத அளவுக்கு மோசமாக இருந்ததுடன், 'நல்லாட்சி' அரசாங்கத்தின் உண்மையான சுயரூபத்தையும் அம்பலப்படுத்தியுள்ளது.

மாணவர்களினதும் வைத்தியர்களினதும் நியாயமான கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பதிலாக, அவர்களை சில அரசியல் சக்திகள் பின்னால் இருந்து இயக்கவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பது, இந்தப் பிரச்சினையில் அரசாங்கத்தின் ஆக்கபூர்வமற்ற பிடிவாதமான போக்கையே எடுத்துக் காட்டுகிறது.

நியாயமான கோரிக்கைளை வைத்து ஆரம்பிக்கப்பட்ட மாணவர்களின் போராட்டத்துக்கு அரசியல் சாயம் பூசுவதன் மூலம், அரசாங்கம் நிலைமையை மேலும் சிக்கலாக்கவே விரும்புகிறது என்பது தெளிவாகிறது. அரசாங்கம் தனது போக்கில் பிடிவாதமாக இருக்குமானால், அது நிச்சயம் நாட்டில் விரும்பத்தகாத விளைவுகளுக்கு இட்டுச் செல்லும். பல நாடுகளில் அடக்குமுறை அரசுகள் மாணவர்கள் மீது கைவைத்தே தமது ஆட்சியதிகாரத்தை இழந்தன என்பதை 'நல்லாட்சி' ஆட்சியாளர்கள் உணராவிட்டால் அவர்களும் அப்படியான ஒரு சிக்கலில் சிக்க நேரிடும்.

**-பகிரதன்**

# ஒலிம்பிக் வீராங்கனையின் துயரமான நிலை!

**ஒ**லிம்பிக் சர்வதேசப் போட்டியில் குறுந்தூர ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டு வெள்ளிப்பதக்கம் பெற்று இலங்கையின் புகழைச் சர்வதேச அரங்கில் நிலைநாட்டிய சுசந்திக ஜெயசிங்க, தனக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க, தனக்குக் கிடைத்த வெள்ளிப் பதக்கத்தை விற்பதற்குத் தீர்மானித்துள்ளதாக அறிவித்திருக்கிறார். அதற்கு சில தரப்புகளிடமிருந்து 250 மில்லியன் (25 கோடி) விலையும் மதிக்கப்பட்டிருக்கிறது.

சுசந்திகவின் இந்தத் தீர்மானம் நாட்டின் இன்றைய நிலையை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. ஒருபக்கத்தில் அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கொழுத்த சம்பளம், இலவச பங்களாக்கள், தீர்வையற்ற ஆடம்பரக் கார்கள் என்பனவற்றை நாட்டு மக்களின் வரிப்பணத்தில் பெற்றுக்கொண்டு உல்லாசமாக வாழ்வதுடன், ஊழல்கள் மோசடிகளிலும் ஈடுபடுகையில், நாட்டின் புகழை உலக அரங்கில் நிலைநாட்டிய சுசந்திக போன்ற வீராங்கனைகள் வாழ வழியில்லாது திண்டாடுவதும், தனக்குக் கிடைத்த பதக்கத்தை விற்க முனைவதும், இந்த நாட்டை பாரிய நோய் பீடித்திருப்பதையே எடுத்துக் காட்டுகிறது.

சுசந்திகவின் நிலைக்கு ஒரு தீர்வு காண்பதை விடுத்து, அவரது முடிவை விளையாட்டுத்துறை அமைச்சர் கண்டித்திருப்பது பொறுப்பற்ற செயலாகும். அவரது கண்டனத்துக்குப் பதிலளித்த சுசந்திக, "விளையாட்டுத்துறை அமைச்சரை விட நான் இந்த நாட்டுக்குக் கூடுதலாகச் சேவை செய்திருக்கிறேன்" எனச் சரியாகவே பதிலடி கொடுத்திருக்கிறார்.